விலை ரூபா: 5.00 பக்கங்கள்:-பத்து Registered as a News paper in Sri Lanka

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நாவாந்துறைப் படிப்பகம்

# வலம்புரி
VALAMPURI




சங்கு 03 வள்ளுவர் ஆண்டு 2033 புரட்டாதி 26 சனிக்கிழமை (12.10.2002) தொலைபேசி~ 2223378 ஒலி 297

## மறியலில் ஈடுபட்டவர்கள் மீது காடைத்தனம்

# திருகோணமலையில் பொலிஸார்

# துப்பாக்கிச்சூடு- கிரனைட் வீச்சு

## பொதுமக்கள் மூவர் பலி - 35பேர் காயம்

(திருகோணமலை நிருபர்கள் ரட்ணா, சசி)

**அம்பாறை மாவட்டம் திருக்கோவில் காஞ்சிரம்குடாப் பகுதியில் விசேட அதிரடிப்படையினரால் அப்பாவிப் பொதுமக்கள் ஏழு பேர் சுட்டுக் கொல்லப்பட்டமையைக் கண்டித்து நேற்றுத் திருகோணமலையில் அனுஷ்டிக்கப்பட்ட பூரண ஹர்த்தாலின் போது சிங்களப் பேரினவாதிகளும், பொலிஸாரும், அதிரடிப்படையினரும் ஒன்று சேர்ந்து நடத்திய கைக்குண்டுவீச்சு மற்றும் துப்பாக்கிப் பிரயோகத்தில் மூன்று பொதுமக்கள் பலியானதுடன் 35பேர் காயமடைந்துள்ளனர்.**

துப்பாக்கிச் சூட்டுக்கும் கிரனைட் தாக்குதலுக்கும் இலக்காகி திருகோணமலை நகரசபையின் சுத்திகரிப்புத் தொழிலாளி கோணமுத்து கோணலிங்கம் (வயது 18), கிறிஸ்ரி மயூரன் (வயது 22), கணபதிப்பிள்ளை சசிக்குமார் (வயது 32) ஆகிய மூவருமே பலியானவர்களாவர்.

இச்சம்பவத்தின் போது காயமடைந்தவர்களை வைத்தியசாலையில் அனுமதிப்பதற்கு பல இடையூறுகளை சமாளிக்கவேண்டியிருந்தது.

காயமடைந்தவர்களை அம்புலன்ஸ் வண்டியில் எடுத்துச் சென்றபோது அவர்கள் தாக்குதலுக்குள்ளானார்கள். இதன் பின்னர் காயமடைந்தவர்களை நாலு படகுகளில் கடல் வழியாக

(10ம் பக்கம் பார்க்க)

### திருமலை- மாத்தறை

## புகையிரதப் பாதை நேற்று தீயிட்டுக் கொளுத்தப்பட்டது

(திருகோணமலை)

திருகோணமலையில் நேற்றுக் காலை இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களை அடுத்து திருகோணமலையில் இருந்து மாத்தறை நோக்கிச் செல்லும் புகையிரதப் பாதையை இனந்தெரியாத நபர்கள்

(10ம் பக்கம் பார்க்க)

## காயமடைந்தவர்களின் விபரம்

(திருகோணமலை)

திருகோணமலையில் நேற்று இடம் பெற்ற ஹர்த்தால் [illegible] வடிக்கைகளைத் தொடர்ந்து இடம் பெற்ற அசம் பாவிதங்களின் போது [illegible] அப்பாவிப் பொதுமக்கள் காயமடைந்துள்ளனர்.

காயமடைந்தவர்கள் அனைவரும் திருகோணமலை (10ம் பக்கம் பார்க்க)


வெறிச்சோடிக் கிடக்கும் திருமலை பஸ் நிலையம்


ரயர்கள் போட்டுத் தீயிடப்படும் காட்சி




துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கானவர்கள்

## காஞ்சிரம்குடாப் படுகொலையைக் கண்டித்து

# யாழ். குடாநாடு பூராகவும்

வெறிச்சோடிக் கிடக்கும் திருமலை பஸ் நிலையம் | ரயர்கள் போட்டுத் தீயிடப்படும் காட்சி | துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கானவர்கள்

## காஞ்சிரம்குடாப் படுகொலையைக் கண்டித்து

# யாழ். குடாநாடு பூராகவும் இன்று பூரண ஹர்த்தால்!

## பொது அமைப்புக்களின் ஒன்றியம் ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

**அம்பாறை மாவட்டம் திருக்கோவில் காஞ்சிரம்குடாவில் அதிரடிப் படையினரால் அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப்பட்டமையைக் கண்டித்து யாழ். குடாநாடு பூராகவும் இன்று துக்க தினமும், பூரண ஹர்த்தாலும் அனுஷ்டிக்கப்படவுள்ளது.**

யாழ். மாவட்ட பொது அமைப் புக்களின் ஏற்பாட்டில் குடாநாடு பூராகவும் நடைபெறவுள்ள துக்க தினம், பூரண ஹர்த்தாலுக்கு பொது மக்களின் ஒத்துழைப்பை வேண்டி யாழ். மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம் நேற்று அறிக்கை யொன்றை வெளியிட்டுள்ளது.

அவ்வறிக்கையின் விபரம் வருமாறு:-

அம்பாறை மாவட்டம் திருக்கோவில் காஞ்சிரம்குடா விசேட அதிரடிப்படையினர் மக்கள் மீது மேற்கொண்ட கண்மூடித்தனமான மனிதப் படுகொலையை நாம் மிகவும் வன்மையாகக் கண்டிக்கின்றோம். ஒரு கொடூர யுத்தத்திற்கு முகங் கொடுத்த மக்கள் மத்தியில் ஸ்ரீலங்கா அரசும் தமிழீழ விடுதலைப்புலிகளும் ஏற்றுக் கொண்ட

(10ம் பக்கம் பார்க்க)

## அம்பாறைச் சம்பவத்தை விசாரிக்க விசேட குழு

(கொழும்பு)

அம்பாறை காஞ்சிரங்குடாப் பகுதியில் இடம் பெற்ற மோதல் சம்பவங்கள் குறித்து விசாரணை செய்வதற்கு மூவர் அடங்கிய விசேட குழுவொன்று அரசினால் நியமிக் கப்பட்டுள்ளது.

சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஒருவரைச் செயலாளராகக்

(10ம் பக்கம் பார்க்க)

## யாழ். பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழா நாளை

(யாழ்ப்பாணம்)

இன்று நடைபெறவிருந்த யாழ பல்கலைக்கழக 22வது பட்டமளிப்பு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெறுமென யாழ் பல்கலைக் கழக துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை அறிவித் துள்ளார். இது தொடர்பாக அவர் மேலும தெரிவிக்கையில்:-

இன்று நடைபெறவிருந்த பட்ட மளிப்பு விழா தவிர்க்க முடியாத

(10ம் பக்கம் பார்க்க)

## நிலக்கண்ணி வெடித்ததில் குடும்பஸ்தர் உடல் சிதறிப்பலி

**மட்டுவிலில் சம்பவம்**

(யாழ்பாணம்)

மட்டுவில் வடக்குப் பகுதியிலுள்ள தனது வயலை மண் வெட்டியினால் கொத்திய போது புதையுண்டிருந்த கண்ணிவெடி வெடித்ததில் குடும்பஸ்தர்

(10ம் பக்கம் பார்க்க)

## திருமலையில் ஊரடங்கு

(நமது நிருபர்)

திருகோணமலையில் தமிழ் மக்கள் மீது சிங்கள பேரினவாதிகளால் கட்டவிழ்த்து விடப்பட்ட வன்முறைச் சம்பவங்களை அடுத்து அங்கு நேற்று முற்பகல் 11மணிமுதல் இன்று காலை

(10ம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# திருமலையில் பொதுமக்கள் மீது சூடு

# சமாதானத்தைக் குழப்பும் சதி!

## இரா. சம்பந்தன் எம். பி. கண்டனம்

(கொழும்பு)

அம்பாறையில் படையினர் பொதுமக்கள் மீது மேற்கொண்ட தாக்குதல்களைக் கண்டித்து திருகோணமலைப் பகுதியில் நேற்று மேற்கொள்ளப்பட்ட அமைதியான ஹர்த்தலின் போது தமிழ் மக்கள் மீது மேற்கொளப்பட்ட தாக்குதல்களைத் தாம் வன்மையாகக் கண்டிப்பதாக தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகமும் பாராளுமன்ற உறுப்பினருமான இரா. சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேற்கண்ட அறிக்கை ஒன்றை வெளியிட்டிருந்தார். அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

அமைதியான முறையில் ஹர்த்தால் இடம்பெற்றுக் கொண்டிருக்கும் வேளையில் 'சிறிமாபுர' என்னும் இடத்தில் ஒன்று கூடிய சட்ட விரோதமான சில சக்திகள் திருக்கடலூர்க் கிராமத்தில் வாழ்கின்ற தமிழ் மக்கள் மீது கிரேனட் தாக்குதலும், துப்பாக்கிப் பிரயோகமும் நடத்தியுள்ளனர் சற்று நேரத்திற்குப் பின் இன்னுமொரு சட்டவிரோதமான குழு 'அபயபுர' என்னும் இடத்தில் கூடி அநுராதபுர சந்திக்கும் அபயபுர என்னும் இடத்திற்குமிடையில் உள்ள 'அன்புவழிபுர' பகுதியில் வாழ்கின்ற தமிழ் மக்கள் மீது கிரேனட் தாக்குதலையும் துப்பாக்கிப்பிரயோகத் தாக்குதலையும் நடாத்தியுள்ளனர்.

மேற்குறிப்பிட்ட தாக்குதல்களின் காரணமாக இது வரையில் மூன்று தமிழர்கள் உயிரிழந்திருப்பதுடன்மேலும் 36 தமிழர்கள் காயமடைந்துள்ளனர். இவர்களில் ஒன்பது பேரின் நிலைமை கவலைக்கிடமாக இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. மேற்குறிப்பிட்ட தாக்குதலின் காரணமாக இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்கள் சிறு காயமுற்றுள்ளார்கள் என்றும் கூறப்படுகின்றது.

பெரும்பான்மைச் சமூகத்தைச்சேர்ந்த சட்டவிரோத சக்திகள் எந்தளவிற்கு தமிழ் மக்கள் மீது வன்முறையைக் கட்டவிழ்த்து விட்டிருக்கின்றார்கள் என்பதை இச்சம்பவம் மிகவும் தெளிவாக எடுத்துக்காட்டுகின்றது.

அப்பாவித் தமிழர்கள் மீது நடத்தப்பட்ட கோழைத்தனமான இத்தாக்குதலை நாம் மிகவும் வன்மையாகக் கண்டிப்பதுடன் மேற்குறிப்பிட்ட தாக்குதல் சம்பவங்கள் சமாதான முயற்சியைக் குழப்புவதற்கு எடுக்கப்பட்ட திட்டமிட்ட இன்னுமொரு நடவடிக்கையென நாம் கருதுகின்றோம்.

இத்தாக்குதல் சம்பவம் தொடர்பாக பாரபட்சமற்ற விசாரணையை நடத்தி, பாரதூரமான குற்றங்களை இழைத்தவர்களுக்கெதிராக சட்டநடவடிக்கை எடுக்கப்படவேண்டும். அத்துடன் இறந்தவர்கள் மற்றும் காயமடைந்தவர்களின் குடும்பங்களுக்கு நட்டஈடு வழங்கப்படவேண்டும் என்றும் அவ்வறிக்கையில் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

## சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை கண்டனம்

(யாழ்ப்பாணம்)

நேற்று முன்தினம் அம்பாறை திருக்கோவில் பகுதியில் ஸ்ரீலங்கா விசேட அதிரடிப் படையினரிற்கு எதிராக அப்பகுதி மக்களால் மேற்கொள்ளப்பட்ட ஜனநாயக ரீதியான வெகுஜனப் போராட்டத்தின் போது அப்பாவிப் பொது மக்கள் ஏழுபேர் கோரத்தனமாகச் சுடப்பட்டுப் படுகொலை செய்யப்பட்டதுடன் 30 க்கும் அதிகமான அப்பாவிப் பொதுமக்கள் படுகாயப் படுத்தப்பட்டுள்ளனர். இச்செயலை நாம் மிகவும்வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

இவ்வாறுசர்வதேச தமிழீழ மாணவர் பேரவை விடுத்த கண்டன அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது

புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட பின்னர் சமாதான முயற்சிகள் அமைதியாகவும், வேகமாகவும் முன்னெடுக்கப்பட்டு வரும் இவ்வேளையில் ஸ்ரீலங்கா அதிரடிப்படையினரின் காடைத்தனமான இத்தாக்குதல் சமாதானத்தைக் குழப்புவதற்காகவென திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுவதாகவே கருதவேண்டியுள்ளது.

இதன் மூலம் வடக்குக் கிழக்கில் ஸ்ரீலங்கா இனவாத இராணுவம் குடிகொண்டிருக்கும் வரை சமாதான முயற்சிகளை முன்னெடுக்க முடியாத நிலையே தொடரும்.

இக்கொலை தொடர்பான கண்டன ஊர்வலத்தில் ஈடுபட்ட திருமலை மக்கள் மீது ஸ்ரீலங்கா இராணுவத்தினர் தாக்குதல் மேற்கொண்டதில் சிலர் கொல்லப்பட்டதுடன் பலர் படுகாயப்படுத்தப்பட்டுள்ளனர்.

அம்பாறையில் படுகொலை செய்யப்பட்டவர்களில், ஐந்திற்கும் மேற்பட்டோர் பாடசாலை மாணவர்களாவர் இவ்வாறு மாணவர்களைப் படுகொலை செய்வதனை நாம் மிக வன்மையாகக் கண்டிக்கின்றோம். எதிர்காலத்தில் இவ்வாறான தாக்குதல்கள் நடைபெறுமாயின் வடக்கு கிழக்கில் இருந்து இராணுவம் வெளியேறும் வரை இராணுவத்தினருக்கு எதிராக சாத்வீகமான போராட்டங்களை ஆரம்பிக்க வேண்டிய இக்கட்டான சூழ்நிலை உருவாகும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## போலித் தோட்டா வைத்திருந்தவர் கைது

(மந்திகை)

முகமாலைச் சோதனைச் சாவடியூடாக போலித் தோட்டாக்களைக் கொண்டு வரமுற்பட்ட இளைஞர் ஒருவர் பொலிசாரினால் கைது செய்யப்பட்டு சாவகச்சேரி நீதிமன்றில் ஆஜர்படுத்தப் பட்டார்.

மானிப்பாய் சுட்டுடையைச் சேர்ந்த நாகராஜா ஜெயக்குமார் (வயது 21)என்பவரே நீதிமன்றில் ஆஜர்ப் படுத்தப்பட்டவராவார்.

கிளிநொச்சியில் நேற்று முன்தினம் நடைபெற்ற மகளிர் எழுச்சிதின நிகழ்வின் போது இடம்பெற்ற மாதிரித் தாக்குதல் சம்பவத்திற்கு பயனபடுத்தப் பட்ட போலித் தோட்டக்களையே தாம் கொண்டுவந்ததாக இளைஞன் தெரிவித்ததை அடுத்து எச்சரிக்கை செய்த நீதிபதி அவரை விடுதலை செய்தார். (த-23)

### யாழ் கல்விவலயத்தில்

## அதிபர் வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். வலயத்திற்கு உட்பட்ட 6 பாடசாலைகளில் நிலவும் அதிபர் வெற்றிடங்களுக்கு யாழ். வலயத்தில் கடமையாற்றும் இலங்கை ஆசிரியர் சேவை வகுப்பு I ஐச்சேர்ந்தவர்களை மூப்பு அடிப்படையில் நியமிக்க வடக்கு கிழக்கு மாகாணக் கல்வியமைச்சின் செயலர் அனுமதியளித்துள்ளார்.

இதன் அடிப்படையில் அடுத்தமாதம் முதலாம் திகதி நியமனங்கள் வழங்கப்படவுள்ளன. தகுதி உடைய ஆசிரியர்கள் இம்மாதம் 21ம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக சுயமாகத் தயாரித்த விண்ணப்பப்படிவத்தை யாழ். வலயக்கல்வி அலுவலகத்திற்கு பதிவுத் தபாலில் / நேரில் அனுப்பி வைக்கமுடியும்.

பத்தமேனி ரட்ணேஸ்வரி வித்தியாலயம், கோப்பாய் வடக்கு றோ. க. த. க. பாடசாலை, கோப்பபாய் தெற்கு கந்தவேள் வித்தி, கதிரிப்பாய் சுப்பிரமணியம் வித்தி, அச்செழு மே. மி த. க பாடசாலை, ஆகியவற்றில் நிலவும் அதிபர் வெற்றிடங்களே நிரப்பப்படவுள்ளன. (உ-3)

## வவு. பிரதேச செயலரின் மாற்றத்திற்கு எதிர்ப்பு

(வவுனியா)

வவுனியா பிரதேசசெயலராக நியமனம் செய்யப்பட்ட எஸ். சத்தியசீலன் நேற்று முன்தினம் பதவி மாற்றப் பட்டமையை எதிர்த்து வவுனியாமக்கள் நேற்று முழுநாளும் வவுனியா பிரதேசசெயலகத்தை இயங்காதவாறு முற்றுகையிட்டு ஆர்ப்பாட்டம் செய்தனர், இதனால் செயலகப்பணிகள்யாவும் ஸ்தம்பிதம் அடைந்தன.

பிரதேச செயலாளராக நியமிக்கப்பட்டிருந்த சத்தியசீலனின் இடத்திற்கு செட்டிகுளம் பிரதேசசெயலர்செல்வி துரைச்சாமி நியமிக்கப்பட்டுள்ளதாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சினால் அனுப்பி வைக்கப்பட்டிருந்த பக்ஸ் செய்தியை எதிர்த்தே மக்கள் பிரதேசசெயலகத்தை முற்றுகையிட்டிருந்தனர். (ம)

## பல்லப்பை பாதையை திறந்துவிட கோரிக்கை

(அச்சுவேலி)

புலோலி பல்லப்பை இராணுவ முகாம்பகுதி ஊடான பாதையை மக்களின் பாவனைக்கு திறந்துவிடுமாறு அப்பகுதிமக்கள் பருத்தித்துறை பிரதேச செயலரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இப்பகுதியில் ஸ்ரீலங்கா இராணுத்தினர் கடந்த 5வடங்களாக நிலைகொண்டிருப்பதால் பாதையைப் பாவிக்க அனுமதி மறுக்கப் பட்டுள்ளது.

இதேவேளை ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் ஆலய உற்சவகாலத்தில் இப்பாதையை மக்கள் பாவிக்க அனுமதித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. உ-14)

### அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி

## ஜிம்மி ஹாட்டருக்கு சமாதான நோபல் பரிசு

(ஒஸலோ)

2002ம் ஆண்டின் சமாதானத்திற்கான நோபல்பரிசு அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி ஜிம்மிஹாட்டருக்குக் கிடைக்கவுள்ளது.

சர்வதேச பிரச்சினைகளுக்கு அமைதியான முறையில் தீர்வுகாண்பதற்காக பல தசாப்தங்களாக ஓய்வின்றி செயற்பட்டுவந்தமை ஜனநாயக மற்றும் மனிதஉரிமைகளை பேணிப் பாதுகாப்பதில் அர்ப்பணிப்புடன் செயற்பட்டமை மற்றும் பொருளாதார சமூக மேம்பாடுகளை தூண்டியமை ஆகியவற்றுக்காக இவருக்கு நோபல் பரிசு வழங்கப்படவுள்ளது.

78வயதுடைய ஜிம்மிஹாட்டருக்கு சமாதானத்திற்கான நோபல் பரிசுவழங்கப்படவுள்ளமைக்கு உலகத் தலைவர்கள் தமது மகிழ்ச்சியையும் பாராட்டுக்களையும் தெரிவித்துள்ளனர். (த-5)

### கலந்துரையாடல்

3.30மணிக்கு துயிலும் இல்ல வளவில் நடைபெறவிருப்பதாக மாவீரர் துயிலும் இல்ல புனரமைப்புக் குழுச் செயலாளர் தெரிவித்துள்ளார். (உ-14)

## கிளைக் குழு தேர்தல் ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

இன்று 12ந்திகதிநடைபெறவிருந்த ஊர்காவற்றுறை ப.நோ.கூட்டுறவுச் சங்கக் கிளைக்குழுத் தேர்தல் துக்கதின அனுஷ்டிப்பின் காரணமாக திகதி குறிப்பிடப்படாது ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் எஸ.கனகசபாபதி தெரிவித்துள்ளார். (ந)

## காங்கிரஸ் செயற்குழு இன்று கூடும

(யாழ்ப்பாணம்)

கிழக்குமாகாணத்தில் கடந்த இரு தினங்களாக இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்கள் தொடர்பாக ஆராயும் பொருட்டு அகில இலங்கைத் தமிழ்க்காங்கிரஸ் கட்சியின் செயறகுழுக் கூட்டம் சித் தலைவர் அ. விநாயகமூர்த்தி தலைமையில் இன்று அவசரமாக கூடவுள்ளது. (த

# கண்ணி வெடிகளைத் தடைசெய்யும் சாசனத்தில் இலங்கை கைச்சாத்திடும்

## அமைச்சர் பீரிஸ் தெரிவிப்பு

(கொழும்பு)

இவ்வாண்டின பிற்பகுதியில கனடாவின் ஒட்டாவா நகரில் நடைபெறவுள்ள சர்வதேச மகாநாடொன்றில் வைத்து கண்ணிவெடிகளைத் தடைசெய்யும் சாசனத்தில் இலங்கை கைச்சாத்திடத் தயாராகி வருகிறது. ஆனால் விடுதலைப்புலிகளும் அதற்கு உடன்பட்டால் மட்டுமே அது சாத்தியமானது என்று அமைச்சர் ஜீ எல். பீரிஸ் நேற்று முனதினம் செய்தியாளர் மாநாடொன்றில் தெரிவித்துள்ளார். புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் இவ்வாரம் இலங்கை வரும்போது இது பற்றி பேசவிருப்பதாகவும் பீரிஸ் தெரிவித்துள்ளார்.

இடம் பெயர்ந்தவர்கள் மீளக்குடியமர்வதற்கு இரு தரப்பினருமே முன்னுரிமை கொடுத்துவரும் வேளையில் கண்ணிவெடிகளைத் தடைசெய்தல் அத்தியாவசியமானது ஆகும். இப்பொழுது இருதரப்பினருமே கூட்டாகக் கண்ணிவெடிகளை அகற்றி வருகின்றோம். இதற்காக எமக்குள் நாம் ஒப்பந்தம் எதுவும் செய்துகொண்டிருக்கவில்லை.

கண்ணிவெடிகளை தடைசெய்யும் ஒப்பந்தம் செய்து கொண்டாலே சர்வதேச உதவிகளை பெறக்கூடியதாக இருக்கும். நாம் படிப்படியாக எமது தந்திரோபாயத் திட்டங்களை செயற்படுத்துகின்றோம். அவசர அபிவிருத்தி பணிகளுக்குக் கூட்டுச் செயலணிப் பிரிவை பயன்படுத்துவதற்கு அரசாங்கம் விருமபுகிறது. இவ்வாறு அமைச்சர் பீரிஸ் அங்கு மேலும் தெரிவித்துள்ளார். (த

## விவசாயச் சங்க போட்டிகள் ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண விவசாயச் சங்கம் இன்று நடத்தவிருந்த கட்டுரை மற்றும் வினாவிடை போட்டிகள் தவிர்க்கமுடியாத காரணத்தால் நடைபெற மாட்டாது என்றும் பரீட்சை நடைபெறும்திகதி பின்னர் அறிவிக்கப்படும் என்றும் பேராசிரியர் ஞானகுமாரன் தெரிவித்துள்ளார்.

இப்பரீட்சைகள் வடமராட்சி, தென்மராட்சி யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி ஆகிய இடங்களில்நடைபெற இருந்தமை குறிப்பிடத்தக்கது (5)

## பரிசில்நாள்

(கோப்பாய்)

கோப்பாய் மகாவித்தியாலயத்தின் பரிசில்நாள் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 30மணிக்குஅதிபர் சு.அகிலதாஸ் தலைமையில் நடைபெறவுள்ளது. (உ-79)

# நவராத்திரி பாமாலை

## (ஆறாம் நாள்)



### ஒளியேற்றிட வேண்டும்

அன்பினால் அவனி சிறந்தோங்கிட வேண்டும்!
அறியாமை இப்பாரினில் நீங்கிட வேண்டும்!
அதிகாரம் இம்மண்ணில் அழிந்திட வேண்டும்!
நிலைகெட்ட மானிடம் நிமிந்திட வேண்டும்
தொடர்கின்ற சமாதானம் நிலைத்திட வேண்டும்!
தாயே நவராத்திரியில் உன்னடி சரண்புகுந்தோம்
ராத்திரிகளுக்கு ஒளியேற்றிட வேண்டும்!

எஸ் கஜன்
யா/ சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி

### 'வளமுடன் வாழவே!'

வீரம் செறிய வல்லவராய்ப் படைத்து
வெறி கொண்ட பகையை விரட்டி
கரம் நீட்டிய ஏழை குறை தீர்க்க
வாட்டிய பசிப்பிணி தனைப் போக்கி
தரம் போற்றும் கலைஞராய்த் திகழ
சகல கலைகளும் அருளும் தேவியே
வரம் அருளுவீர் யாவும் பெற்று
வளமுடன் நலமாய் வாழவே!

என்; பிறேமசீலன்
உரும்பிராய் இந்துக்கல்லூரி

### கற்றிடச் சொல்லிக்கொடு

வீரம் தரும் அலைமகளே!
உடல் வலிமை பெற சக்தி கொடு

செல்வம் தரும் மலைமகளே!
தர்மம் செய்திட செல்வம் தனைக்கொடு

கல்வி தரும் கலைமகளே!
பல கலையும் கற்றிட சொல்லிக்கொடு

சி. சுயி
யா. கனகரத்தினம் ம.ம.வி

### யாதுமாய் நின்றாய் தேவி

அகிலமெல்லாம் உன் ஒளியை பரப்ப- இந்த
அவனியில் வந்துதித்த பராசக்தியே!
மூவுலகங்களும் பொருளாய் நின்று
முக்கடவுள்களின் துணையாய் நின்று
முச்செல்வங்களின் தலைவியாய் நின்று
ஞாலத்திலுள்ள உயிர்களை காத்து
யாகம்செய்யும் தேவர்கள் போற்றும்
யாதுமாய் நின்றாய் தேவியே!

சி. கேதீஸ்வரி
மருதங்கேணி- வடக்கு,
தாளையடி

### தாயே நாம் வழிபடுகிறோம்

நவராத்திரி காணும் அம்மாவே
புரட்டாதி மாதத்தில் அமாவாசைக்கு
அடுத்த நாளில் கும்பம் வைக்கிறோம்
ஏன்? உன்னை எம்மனதில் இருத்தி
-வழிபட;

சு. சிவசக்தி
சுன்னையூர்

### அன்பு நிறைந்த தாய்!

அம்மை எங்கள் தாய் அன்புநிறைந்த தாய்
செம்மையாகவே வாழ கல்வி அருளும் தாய்
இம்மை வாழ்விலே உந்தன் அருளுமில்லையேல்
பொருளுமில்லையே எமக்கு புகழும் இல்லையே!

வே. சிவகணேசன்
யாழ். இந்துக்கல்லூரி.

---

அரச நியமனம் வழங்குவதன் அவசியத்தை வலியுறுத்தி

# வேலையற்ற பட்டதாரிகள் சங்கம்

# தொழில் அமைச்சருக்கு கடிதம்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டவேலையற்ற பட்டதாரிகள் சங்கம் 6 அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து தொழில் அமைச்சர் மகிந்த சமரசிங்கவுக்கு அவசர கடிதம் ஒன்றினை அனுப்பி வைத்துள்ளது.

அக் கடிதத்தில் குறிப் பிடப் பட்டுள்ளதாவது:

யாழ். மாவட்டத்தில்வேலையற்ற பட்டதாரிகளாகிய நாம் கடந்த காலங்களில் தொடர்ந்து கொண்டிருந்த யுத்தம் என்னும் கோரப்பிடியின் மத்தியில் சிக்கி பல இன்னல்களுக்கு மத்தியில் பல்கலைக் கழகங்களில் படித்து பட்டம் பெற்று வெளியேறி கடந்த 4வருடங்களுக்கு மேலாகஎவ்வித வேலை வாய்ப்பும் இன்றி பரிதவித்திருக்கும் இவ்வேளையில் அரசிற்கும், பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் பல தடவைகள் எமது அவலங்களை எடுத்து கூறிய போதும் எவ்வித பலாபலன்களும் ஏற்படவில்லை.

யாழ். மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தில் சுமார் ஆயிரத்து 800இற்கும் மேற்பட்டவர்கள் அங்கத்தவர்களாகவுள்ளனர். இவர்கள் 1998, 1999, 2000, 2001 ஆம் ஆண்டுகளில் பட்டம் பெற்று வெளியேறி இதுவரை எந்தவித வேலைவாய்ப்புக்களும் இன்றி இருக்கின்றார்கள்.

ஏனைய மாவட்டங்களிலுள்ள பட்டதாரிகள் வேலை வாய்ப்பை பெற்றுக் கொள்வதற்கான சந்தர்ப்பங்கள் அதிகமாகவுள்ள நிலையில் யாழ். மாவட்டப் பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பு எதுவும் கிடைக்கக் கூடிய வழிகள் இல்லைஎன்பது யாவரும் அறிந்ததே.

அரசினால் வழங்கப்படுகின்ற நியமனங்களில் கூட காலதாமதம் ஏற்படுகின்றது. அத்துடன், ஏற்கனவே நிரந்தர பட்டதாரி நியமனத்தில் உள்ளவருக்கும் அண்மையில் ஆசிரியர் நியமனம் வழங்கப் பட்டுள்ளது.

இதனால் பட்டதாரிகள் வேலைவாய்ப்பற்று இருக்க வேண்டிய நிலைக்கு உள்ளாகின்றனர். மேலும் அரச திணைக்களங்கள், கூட்டுத் தாபனங்கள் ஆகியவற்றில் நீண்டகாலமாக பட்டதாரி வெற்றிடங்கள் நிரப்பப் படாது இருக்கின்றன.

எமது பின்வரும் கோரிக்கைகளை சம்பந்தப்பட்டவர்களுடன் தொடர்பு கொண்டு வேலையற்ற பட்டதாரிகளுக்கு சாதகமான பதிலை பெற்று ஆவன செய்யுமாறு பணிவன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

★ நேர்முகப் பரீட்சை நடத்தப்பட்டு இதுவரை நியமனம் வழங்கப்படாத இளைஞர் சேவை உத்தியோகத்தர் வெற்றிடங்களை நிரப்புதல்.

★ நிரப்பப்படாது இருக்கும் சமுர்த்தி முகாமையாளர் வெற்றிடங்களை நிரப்புதல்.

★ வடக்கு-கிழக்கு மாகாண கல்வியமைச்சினால் வழங்கப் படாமல் மிகுதியாக இருக்கும் ஆசிரியர் நியமனங்களை உடனடியாக வழங்குவதுடன் வடக்கு-கிழக்கு மாகாண ஆசிரியர் வெற்றிடத்தை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல்.

★ வடக்கு-கிழக்கு மாகாண திணைக்களங்களில் கூட்டுத் தாபனங்களிலுள்ள பட்டதாரி வெற்றிடங்களை நிரப்புதல்.

★ வடக்கு-கிழக்கு மாகாணத்தில் காணப்படும் வெற்றிடங்களை நிரப்பும் முகமாக, நடாத்தப்பட்ட இலங்கை நிர்வாகசேவை போட்டிப் பரீட்சை முடிவுகளை வெளியிட்டு உடனடியாக நியமனம் வழங்குதல்.

★ தர்ண அருண பட்டதாரி தொழில் பயிற்சித் திட்டத்தை நடைமுறைப்படுத்தல்.

மேற்குறிப்பிட்ட எமது கோரிக்கைகளுக்கு உடனடியாக சாதகமான பதில் தந்து யாழ். மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் துயரங்களைத் தீர்க்க வேண்டும் எனக் குறிப் பிடப்பட்டுள்ளது. (உ)

## விபத்தில் படுகாயமடைந்தவர் மரணம்

(மந்திகை)

வீதியைக் கடக்கமுற்பட்ட வேளை மோட்டார்சைக்கிள் மோதியதில் படுகாயமடைந்த நிலையில் யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த குடும்பஸ்தர் கடந்த திங்களன்று அங்கு மரணமானார்.

சாவகச்சேரி சங்கத்தானைப் பகுதியைச்சேர்ந்த நா. வீரசிங்கம் (வயது 52) என்பவரே இவ்வாறு மரணமடைந்தவராவார்.

(உ-23)

## மின்கம்பத்துடன் மோதி படுகாயம்

(மந்திகை)

இரவுநேரம் வெளிச்சமின்றி சைக்கிளில்சென்றவர் மின்கம்பத்துடன் மோதியதில் தலையில் படுகாயமடைந்த நிலையில் பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கடந்த புதனன்று குடத்தனைப்பகுதியில் இடம் பெற்ற இந்தச்சம்பவத்தில் குடத்தனை மேற்கைச்சேர்ந்த க. சற்குணராஜா (வயது 38) என்பவரே படுகாயமடைந்துள்ளார். (உ-23)

## ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

வானிலை ஆராய்ச்சி தொடர்பாக யாழ். செயலக கேட்போர்கூடத்தில் நாளை மறுதினம் நடைபெறவிருந்த கலந்துரையாடல் தவிர்க்க முடியாத காரணத்தால் ஒத்தி வைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

(உ-3)

## ஆசிரிய மாணவர்களுக்கு விளையாட்டுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

அடுத்த மாதம்முதல்வாரத்தில் மகரகமவில் இடம் பெறவுள்ள அகில இலங்கை கரீதியிலான ஆசிரிய கலாசாலை ஆசிரிய மாணவர்களுக்கான விளையாட்டுப் போட்டியில் பலாலி மற்றும் கோப்பாய் ஆசிரிய கலாசாலைகள் பங்கேற்கவுள்ளன;

இப்போட்டிகளில் பங்கேற்பவர்களுக்கான தெரிவுப் போட்டிகள் இம்மாதம் 16, 17, 18 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளன. (உ)

## ஹிஸ்புல்லாவின் உரையால் சபையில் சர்ச்சை

(கொழும்பு)

முஸ்லிம் சமூக அரசியல் உரிமைகளுக்கான அமைப்பினால் நேற்று முன் தினம் கொழும்பு குணசிங்கபுர பிரதீபா மண்டபத்தில் இடம் பெற்ற விசேட கருத்தரங்கு திடீரென இடை நிறுத்தப்பட்டுள்ளது,

தேசிய ஐக்கிய முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லா அங்கு ஆற்றிய உரை காரணமாகவே இக் கருத்தரங்கு இடையில் நிறுத்தப் பட்டுள்ளது.

முஸ்லிம் காங்கிரஸின் தலைமைத்துவத்தை கடுமையாக விமர்சித்து ஹிஸ்புல்லா அங்கு உரையாற்றியதைத் தொடர்ந்து அங்கு பிரசன்னமாயிருந்தோர் கேள்விகளை எழுப்பியுள்ளனர். இதனைத் தொடர்ந்து ஏற்பட்ட குழப்ப சூழ்நிலையினாலே இடை நிறுத்தப்பட்டுள்ளது.

இன்றைய அரசியல் சூழ்நிலையில் முஸ்லிம் மக்களின் எதிர் காலம் தொடர்பாக வடகிழக்கை பிரதிநிதித்துவப் படுத்தும் அரசியல் கட்சிகளின் கருத்துக்களை பெற்றுக் கொள்வதற்காகவே இக் கருத்தரங்கு நடத்தப்பட்டதுகுறிப் பிடத் தக்கது.

(உ-8)

## உயர் நீதிமன்றத் தீர்ப்பு ஜனாதிபதி கவனத்துக்கு

(கொழும்பு)

18, 19 வது அரசியல் அமைப்பு திருத்த சட்ட மூலத்திற்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள் மீதான உயர் நீதிமன்றத் தீர்ப்பு, ஜனாதிபதிக்கும், சபாநாயகருக்கும் அறிவிக்கப்படவுள்ளது.

உயர் நீதிமன்றத்தின் இந்த தீர்ப்பினை பிரதம நீதியரசர் சரத் என் சில்வா, எதிர்வரும் 17 ஆம் திகதிக்கு முன்னர் இவர்களுக்கு அறிவிக்கவுள்ளார்.

7 நீதியரசர்கள் கொண்ட உயர் நீதிமன்றம், இந்தத் திருத்த சட்ட மூலத்துக்கு எதிராக தாக்கல் செய்யப் பட்ட மனுக்கள் தொடர்பான விசாரணையை கடந்த 3 ஆம் திகதி பூர்த்தி செய்திருந்ததுடன், மனுக்களில் உள்ள சட்ட மற்றும் அரசியல் அமைப்பு தொடர்பாக விரிவாக ஆராய்ந்து வருகிறது.

உத்தேச அரசியல் அமைப்பு திருத்த சட்டமூலத்துக்கு எதிராக 31 மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டிருந்தது குறிப் பிடத்தக்கது.

இந்த மனுக்களில், 18, 19 வது அரசியல் திருத்த சட்ட மூலம் அரசியலமைப்பு சட்டத்துக்கு முரணானது என்றும், அவற்றை நிறைவேற்ற வேண்டுமாயின் மக்கள் கருத்துக்கணிப்பு நடத்தப்பட வேண்டும் என்றும் குறிப் பிடப்பட்டிருந்தது. (உ-8)

# பாரிய அழிவை ஏற்படுத்துகின்ற ஆயுதங்கள் ஈராக்கிடம் இல்லை

## அமைச்சர் அப்துல் த:.பாக் அறிவிப்பு

(பக்தாத்)

பாரிய அழிவுகளை ஏற்படுத்துகின்ற ஆயுதங்கள் ஈராக்கிடம் இல்லையென அந்நாட்டின் ஆயுதத் திட்டத்திற்குப் பொறுப்பான அமைச்சர், அப்துல் த.்.பாக் முல்லாவைஸ அறிவித்துள்ளார்.

ஆயுதக்கண்காணிப்பாளர்கள் ஈராக்கிற்கு மீண்டும் திரும்புவதை அமெரிக்கா அனுமதிக்க வேண்டும் என்று கேட்டுள்ள அவர், ஈராக்கில் ஆயுதங்கள் வைத்திருப்பதாக அமெரிக்காவால் குறிப்பிட்டுள்ள இடங்களை, அமெரிக்காவும் செய்தியாளர்களும் பார்வையிடலாம் எனத் தெரிவித்தார்.

ஆயுதப் பரிசோதனையில் அமெரிக்காவிற்கு உண்மையாக ஆர்வமில்லை என்றும், ஆயுதப் பரி சோதனை என்ற பேரில் ஈராக் மீது போர் தொடுக்கவே அமெரிக்கா விரும் பவதாகவும் அவர் கருத்து வெளியிட்டார்.

இதனிடையே அமெரிக்காவின் காங்கிரஸ் சபைக்குக் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ள ஈராக்கின் மத்திய பலனாய்வுத் துறையின் அதிகாரி, அமெரிக்கா தாக்கினால் மட்டுமே ஈராக் திருப்பித்தாக்கும் வாய்ப்பு ஏற்படும் என்றும், ஈராக் தன்னிச்சையாக அமெரிக்கா மீது போர் தொடுக்கும் வாய்ப்பு இல்லை எனவும் குறிப்பிட்டுள்ளார்.

ஈராக் மீது போர் தொடுக்கும் அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்ஷின் திட்டத்திற்கு வெளிநாடுகளில் மட்டுமன்றி அவரது அரசின் அங்கமான புலனாய்வுத்துறையும் மாற்றுக் கருத்துக்களை வெளியிட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. (சு-2)

## பாகிஸ்தானில் கைதிகள் தப்பியோட்டம்

(இஸ்லாமாபாத்)

மரணதண்டனை விதிக்கப்பட்ட 9சிறைக்கைதிகள் பலகிஸ்தான் சிறையிலிருந்து தப்பிச்சென்றுள்ளனர்.

தப்பி ஓடிய கைதிகள் காவலாளியின் கண்களைக் கறுப்புத்துணியால் கட்டிவிட்டுத் தப்பிச்சென்றுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சு)

## ஐ.நாவின்ஆயுதப் பரிசோதகர்களுக்கு ஹெலி கொப்டர்கள் வழங்க முடிவு

(பக்தாத்)

ஈராக்கிலுள்ள ஐக்கிய நாடுகளின் ஆயுதப் பரிசோதகர்களிற்குத் தேவையான ஹெலிகொப்டர்களையும் அதற்கான விமானிகளையும் வழங்குவது பற்றி சிலி நாடு பரிசீலித்து வருகின்றது.

1990ஆம் ஆண்டுகளில் ஈராக்கில் செயற்பட்ட ஐக்கிய நாடுகளின் ஆயுதப்பரிசோதகர்களிற்குத் தேவையான ஹெலிகொப்டர்களை சிலி கொடுத்து உதவியிருந்தது.

இம் முறையும் இது போன்ற உதவிகளைச் செய்துதவுமாறு கேட்கபட்டுள்ளதாகவும், இவ்வாறான உதவியை மீண்டும் வழங்குவது பற்றி ஆராயப்படும்என சிலியின் பாதுகாப்பு அமைச்சர் மைக்கேல் பைக்லற் கூறியுள்ளார்.

இதேவேளை, கொங்கோவிற்கான ஐக்கிய நாடுகளின் செயற்பாடுகளிற்கு துருப்பினர்களைக் கொடுத்து உதவுவது பற்றி யோசித்து வருவதாகவும்அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (சு-2)

# அல்கெய்டா அமைப்பினர் அமெ.நிலைகள் மீது தாக்குதல் நடத்தத் திட்டம்

## சமஷ்டிப் புலனாய்வுப் பணியகம் எச்சரிக்கை

(வாஷிங்டன்)

அல்கெய்டா அமைப்பினர், அமெரிக்க நிலைகள் மீது தாக்குதல் நடத்தத் திட்டமிட்டு வருவதாக சமஷ்டிப் புலனாய்வுப் பணியகம், அமெரிக்காவின் சட்டநிர்வாக நிலையங்களை எச்சரித்துள்ளது.

அமெரிக்கா முழுவதும சட்ட நிர்வாகங்களை மேற்கொணடு வரும் நிலையங்களிற்கு விடுத்துள்ள இந்த எச்சரிக்கையில், அல்கெய்டா அமைப்பின் தலைவர்கள் அண்மைக் காலத்தில் விடுத்துவரும் கருத்துக்கள் இவ்வாறான ஒரு தாக்குதலை எதிர்பார்க்க வைத்துள்ளதாகக் கூறப்படுகின்றது.

அமெரிக்காவின் முக்கிய பொருளாதாரகேந்திர நிலையங்களை இலக்கு வைத்து தாக்குதல் நடத்தப்படுவது தொடர்பாக, ஒஸாமாபின்லேடன் விடுத்த எச்சரிக்கை ஒலிபரப்பு கடந்த ஞாயிற்றுக் கிழமை ஆல்யசீரா தொலைக் காட்சியில் ஒளிபரப்பாகியுள்ளது.

இதே போன்றுநேற்று அல்கெய்டா இயக்கத்தின் உயர்மட்டத் தலைவர்களில் ஒருவரான ஜமான் அல்ஸவாஹிரும எச்சரிக்கை விடுத்துள்ளார்(சு-2)

## இஸ்ரேலியத் தலைநகரில் தற்கொலைத் தாக்குதல்

(ரெல்அவிவ்)

நேற்று முன்தினம் இஸ்ரேலியத் தலைநகரான ரெல்அவிவ்வில் நடாத்தப்பட்ட தற்கொலைத் தாக்குதலில் தற்கொலையாளியுட்பட இருவர் பலியாகினர்.

பலஸ்தீனர்களின் இரா.்.பா அகதிகள் முகாமில் இஸ்ரேலியப் படையினர் நடத்திவருகின்ற தாக்குதலின் பின்னணியில் இத் தற்கொலைத் தாக்குதல் நடைபெற்றுள்ளது.

இரா.்.பா அகதிகள் முகாமில் இஸ்ரேலியப் படையினர் நடத்திய தாக்குதலில் 4பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டதோடு 17பேர் காயமடைந்துள்ளமை தெரிந்ததே.

இதனிடையில், பலஸ்தீனத்தின் மேற்குக் கடற்கரைப் பகுதியில் இஸ்ரேலியப் படையினர் வீடுகளில் சோதனையை நடத்தியதோடு 70பேரைக கைதுசெய்துள்ளனர். (சு-2)

உலக தரிசனம்

## கோபி அனானின் பயணம் ரத்து

(வாஷிங்டன்)

சீனாவிற்கும் மத்திய ஆசிய நாடுகளுக்கு இம்மாதம் மேற்கொள்ளபவிருந்த ஐக்கிய பயணத்தை ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகம் கோபி அனான் ரத்து செய்துள்ளார்.

ஈராக் விவகாரம் தொடர்பாக ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு பேரவையில் பல் வேறு செயற்பாடுகளில் ஈடுபட வேண்டியிருப்பதால் அவர் தனது பய ணத்தை ரத்து செய்துள்ளதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. (சு-4)

## பிரிட்டிஷ் பிரதமர் பேச்சு நடத்தினார்

(மாஸ்கோ)

ஈராக் விவகாரத்தில் ஐக்கிய நாடுகளின் தீர்மானத்திற்கு ஆதரவு பெறும முயற்சியில், பிரிட்டிஷ் பிரதமர் ரொனி பிளேயர், ரஷ்ய ஜனாதிபதி விளாடிமின்புடீனுடன் நேற்று இரண்டாவது சுற்றுப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார். (சு-2)

## அமெரிக்க அதிபருக்கு அங்கீகாரம்

(பக்தாத்)

தேவையேற்பட்டால் ஈராக்கில் ஆயுதக்களைவை மேற்கொள்வதற்கு அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ டபிள்யூ புஷ்ஷிற்கு அமெரிக்கப் பிரதிநிதிகள் சபையும் செனட்சபையும் அங்கீகாரமளித்துள்ளன.

பிரதிநிதிகள் சபை 296இற்கு 153என்னும் வாக்குகள் வித்தியாசத்திலும், செனட்சபை 7இற்கு 23என்னும வாக்குகள் வித்தியாசத்திலும் இவ் அங்கீகாரத்தை வழங்கியுள்ளன (சு-2)

*காஷ்மீர் மாநிலத் தேர்தலில்*

## ஆளும் கட்சி படு தோல்வி மாநில முதல்வர் இராஜினாமா

(காஷ்மீர்)

காஷ்மீர் மாநிலத்தே[illegible]தல்களில் ஆளும் கட்சி படுதோல்வி அடைந்ததையிட்டு, மாநில முதல்வர் ஸாருக் அப்துல்லா தனது பதவியை நேற்று இராஜினாமாச் செய்துள்ளார்.

தனது இராஜினாமா கடிதத்தை மாநில ஆளுநருக்கு சமர்ப்பித்துள்ளதாக கூறியுள்ள அவர் அடுத்து என்ன செய்வது என்பது பற்றி ஆராயவுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, காஷ்மீர் மாநில தேர்தலில் எந்தவொரு கட்சிக்கும் அறுதிப் பெரும்பான்மை கிடைக்காததன் காரணமாக, கூட்டாட்சி நடத்துவது தொடர்பாக இரண்டு கட்சிகள், ஆலோசனை நடத்தி வருகின்றன. (சு-2)

## கேடயப் பாதுகாப்புத் திட்டம் அடுத்த வாரம் அமெ. பரிசோதனை

(வாஷிங்டன்)

கண்டம் விட்டுக் கண்டம் பாயும் ஏவுகணைகளில் இருந்து பாதுகாப்பு வழங்கும் கேடயப்பாதுகாப்புத் திட்டம் தொடர்பான பரிசோதனை ஒன்றை அமெரிக்கா அடுத்த வாரம் மேற்கொள்ள உள்ளது.

இவ்வாறு மேற்கொள்ளப்படும் 7ஆவது பரிசோதனை இது என பென்ரகன் கூறியுள்ளது. பசுபிக் சமுத்திரத்திற்கு மேல் பொம்மை இலக்கைக் குறிவைத்து இடையிடையே தாக்கியளிக்கும் வகையில் சோதனை ஏவுகணை ஒன்றைச் செலுத்தி இப்பரிசோதனை மேற்கொள்ளப்பட உள்ளது.

வடகொரியா ஈராக் போன்ற நாடுகளின் ஏவுகணைத் தாக்குதலில் இருந்து பாதுகாப்பு வழங்கும் வகையிலேயே அமெரிக்காவில் இக்கேடயப் பாதுகாப்புத் திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

1999 ஒக்டோபர் 2ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட இவ்வாறான முதலாவது சோதனையில் முதல் நான்குமுறை இலக்கு சரியாயும், இருமுறை இலக்குத் தவறியிருந்தமையும் தெரிந்ததே. (சு-2)

## நேபாளமன்னர் ஆட்சிப் பொறுப்பைக் கையளிக்க முடிவு

(காட்மண்டு)

நேபாளத்தில் கடந்த வாரம் பிரதமரைப் பதவி விலக்கி ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட மன்னர் ஞானேந்திரா மீண்டும் ஆட்சிப் பொறுப்பை அரசியல் கட்சிகளிடம் கொடுப்பதற்குத் தீர்மானித்துள்ளார்.

இது தொடர்பாக 6அரசியல் கட்சிகளின் தலைவர்களைத் தனித்தனியே சந்தித்துப் பேசவுள்ளார். இடைக்கால அரசு தொடர்பான அறிவிப்பு நாளை வெளியிடப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. (சு-2)

## யாழ்.பல்கலைக்கழகத்தில்....

## அருணாசலம் சோமசுந்தரம்பிள்ளை

கௌரவ கலாநிதிப் பட்டம்வழங் குவதற்காக 1986இல் செயற்கரிய செய்த பெரியோர் **(Men of Achie vement)** என்னும் நூலிலே செயற் கரிய செய்த ஒருவராக வரிசைப் படுத்திச் சிறப்புச் செய்யப்பட் டவராகிய அருணாசலம் சோமசுந் தரம் பிள்ளையை மிகுந்த மதிப்புட னும்பெருமகிழ்வுடனும் அறிமுகஞ் செய்து வைக்கிறேன்.

1929ஆம் ஆண்டு வைகாசித் திங்கள் 4ஆம் நாள் பருத்தித் துறையில் பிறந்த சோமசுந்தரம்பிள்ளை மூன்றாந்தர வகுப்பு வரையும்பருத்தித்துறை தட்டாதெரு மெதடிஸ்த மிஷன் பள்ளியிலே படித்தார். இளம்பள்ளிச் சான்றிதழ்வகுப்பு வரை வேலாயுதம் பள்ளியில் (தற்போது வேலாயுதம் மகா வித்தியாலயம்) கற்றார். முதுபள்ளிச் சான்றிதழ்வகுப்புக் கற்றலை ஹாட் லிக்கல்லூரியிலே மேற்கொண்டார். கேம்பிறிஜ் முதுநிலைத் தேர்வுக்குப் பதிலாக முதுபள்ளிச் சான்றிதழ்த் தேர்வு அறிமுகஞ்செய்யப்பட்ட அதே ஆண்டில் ஓர் ஆண்டுக் கற்கையுடனேயே அதற்குத் தோற்றினார். பல்கலைக் கழகம் செல்வதற்கு வயதுபோதாத காரணத்தினாலே அவர் திருச்சிராப்பள்ளி புனித ஜோசப கல்லூரியிலே தன்னுடைய பட்டப்படிப்பினை மேற்கொள்ள வேண்டியதாயிற்று. இன்றைய இந்தியக் குடியரசுத் தலைவர் முனைவர் அப்துல் கலாம் படித்த அக்கல்லூரியிலேயே கற்றபோது இளங்கலைமாணித் தேர்வில் சிறப்பான அடைவினைப் பெற்றமையினால் பொருளிய லுக்கான சுப்பராவ் பரிசில் அவருக்கு வழங்கப்பட்டது. அங்கு நடைபெற்ற கும்பகோணம் மேதகு மாண்புடை சிறினிவாச சாஸ்திரி தங்கப்பதக்கப் பேச்சுப் போட்டியில் பதக்கம் பெற்றார்.

சென்னைப் பல்கலைக் கழக இளம்பட்டதாரியாக, 1948 வைகாசித்திங்கள் தொடக்கம் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியில் ஆசிரியராகத் தன் தொழில் வாழ்வதைத் தொடக்கினார். தொழிற் கல்வியை மேற்கொள்ளுவதற்காக 1954இல் அவர் ஒரு பட்டயக் கணக்காளரானானார். பினன்ர் 1959தொடக்கம் 1967வரை வரையறுக்கப்பட்ட இலங்கை அச்சகத்தின் குழுக்கணக்கா ளராகவும், 1968 தொடக்கம் இன்று வரையும் வரி மற்றும் முகாமைத் துவ ஆலோசகராகவம், 1982 தொடக்கம் **Merchant Finance Ltd**. இன் முகாதைத்துவப் பணிப்பாளராகவும், நிதி மற்றும் அபிவிருத்தி நிறுவனத்தின் தலைவராகவும் முதன்மை நிறைவேற்றுப் பொறுப்பாளராகவும் பணி செய்துள்ளார். 1980முதல் 1982வரை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வரவு விரிவுரையாளராகவும் பணியாற்றினார்.

இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் புலமையாளனாகவுள்ள அவர் பருத்தித்துறை அரிமாக் கழகத்தின் பட்டயத்தின் தலைவராகவும், உலக அரிமாக் கழகத்தின வலயத் தலைவராகவம் பணியாற்றி யுள்ளார். பலசமய சமூக, நல மேம்பாட்டு மன்றங்களின் பெருந் தலைவராகவும் உறுப்பினராகவும் உள்ளார்.

இலங்கை மீன் வளம் பயன் படுத்தலும் அபிவிருந்தியும் என்னும் நூலை எழுதி 2000ஆம் ஆண்டில் வெளியிட்டார். ஆதன் ஆங்கில மொழிபெயர்ப்பு **Sri Lanka Fisheries Exploitation and Development** அம்பலம் வெளியீடாக 2001இல் வெளிவந்தது. கால்நடை அபிவிருத்தி **(Development of Animal Husvandry)** என்னும் நூல் ஒரே நேரத்தில தமிழிலும் ஆங்கிலத்திலும் வெளிவரவுள்ளது.

கல்வியைத் தொடரப் பணம் வேண்டி நிற்கும் பல பிள்ளைகளுக்கு அவர் உதவிவருகிறார். தன்னுடைய சேமிப்பிலும் உறவினர்கள் இதற்காக வழங்கும் பணக்கொடையிலுமிருந்து இத்தகைய கருணை மிகு சேவையை செய்து வருகிறார். வடமராட்சி மகளிர் கல்லூரியில் அமைக்கப்பட்டுள்ள மண்டபம் அவரது தாராள மனப்பாங்கிற்கு சான்றாக உள்ளது.நிறைவாக யாழ் பல்கலைக்கழகத்தின் பேரவை உறுப்பினராக இருந்து அவர் ஆற்றிய பணி என்றும் நினைவு கூரத்தக்கதாக உள்ளது.

**பேராசிரியர் அ.சண்முகதாஸ்**

# ஜம்மு - காஷ்மீர் தேர்தல் வெற்றிகரமாக முடிந்தது

## வாக்களித்த மக்களுக்கு வாஜ்பாய் பாராட்டு

(காஷ்மீர்)

ஜம்மு - காஷ்மீர் மாநிலத் தேர்தல் முடிவுகள், பாகிஸ்தானால் தூண்டிவிடப்படும், தீவிரவாதத்திற்கு எதிராகவும், ஜனநாயகத்திற்கு ஆதரவாகவும் கிடைத்த வெற்றி என்று பிதமர் வாஜ்பாய் தெரிவித்துள்ளார்.

தேர்தல் நடவடிக்கைகள் வெற்றிகரமாக நடந்து முடிந்ததன் மூலம், அம்மாநிலத்தில் நேர்மையாகவும், சுதந்திரமாகவும் தேர்தல் நடத்தப்படும் என்ற மத்திய அரசின் வாக்குறுதி நிறைவேற்றப்பட்டிருப்பதாகத் தெரிவித்தார்.

மூன்று நாடுகளிற்கான பயணத்தில் முதலில் டென்மார்க்கின் கோபன்ஹான் நகரிற்குச் சென்றுள்ள வாஜ்பாய் அங்கு அளித்த பேட்டியில், தீவிரவாதிகளின் அச்சுறுத்தலை மீறி, தேசப்பற்றுடனும், துணிச்சலுடனும் தேர்தலில் பங்கேற்ற ஜம்மு - காஷ்மீர் மாநில மக்களுக்குத் தனது பாராட்டுக்களைத் தெரிவித்துள்ளார்.

மேலும், இத்தேர்தல் பாகிஸ்தானின் இந்திய எதிர்ப்பப் பிரசாரத்திற்குக் கிடைத்த தோல்வி என்றும் வெற்றி பெற்றது எந்தக் கட்சியாக இருந்தாலும் காஷ்மீர் மக்களின் விருப்பத்தை நிறைவேற்றத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள மக்கள் பிரதிநிதிகளுடன் மத்திய அரசு இணைந்து செயற்படும் என்று வாஜ்பாய் உறுதியளித்துள்ளார். (சு-2)

# இன்று ஒரு தகவல்

## வெற்றியின் இரகசியம்

ஒருநண்பர் சினிமாப்படம் தயாரிப்பவர். அவரிடம் ஒரு நாள் பேசிக்கொண்டிருந்தேன். 'அதுஎப்படி நீங்கள் எடுக்கிற எந்தப்படமும் கையைக் கடிக்காதஅளவுக்கு எடுத்து விடுகிறீர்களே' என்று கேட்டேன்.' 'அது ஒன்றும் பெரியவிஷயமில்லை சார்... பெண்களுக்கென்று சில உருக்கமான காட்சிகள் இளைஞர்களுக்கு என்று சில கவர்ச்சி நடனங்கள் அடிதடிகாட்சிகள் வயதானவர்களுக்கென்று சில ஆன்மீகக் காட்சிகள்-சிறுவர்களுக்குச் சிரிப்பு-இப்படி எல்லாமும்சேர்த்து நான் படம் எடுக்கிறேன். மசாலாபடம்! இது மிகவும் பெரிதாகஇல்லையென்றாலும் ஓரளவுக்குச் சுமாராக ஓடிவிடும்' என்றார். இதுஓர் உத்தி.

சில பத்திரிகை ஆசிரியர்களும் இந்த உத்தியைக் கையாளுவதுஉண்டு. இதற்கு 'பார்னம்' உத்திஎன்று பெயர். அதுஎன்ன 'பார்னம்' உத்தி? அமெரிக்காவில் ஒருவர் இருந்தார். அவர்பெயர் பீனியஸ் 'பார்னம்' அவர் ஒரு சர்க்கஸ் கம்பெனியின் அதிபர் 19 ஆம் நூற்றாண்டில் அமெரிக்காவில் கொடிகட்டிப்பறந்த ஒரு சர்க்கஸ் இவருடையது. இவர் கொஞ்சம் வித்தியாசமான மனிதர். இவருக்கென்று ஓர் அபிப்பிராயம் உண்டு. 'இந்த உலகத்திலே ஒவ்வொரு நிமிடமும் ஓர் ஏமாளி பிறந்துகொண்டேயிருக்கிறான்' என்பது இவருடைய சித்தாந்தம்.

ஒவ்வொருவரையும் திருப்திப்படுத்துகிற அம்சங்களைக் கொஞ்சம் கொஞ்சம்கலந்து கேளிக்கை நிகழ்ச்சிகளை நடத்தியதே அவருடைய மகத்தான வெற்றிக்குக் காரணம். எனவே, இந்த உத்தியை யார் கடைப்பிடித்தாலும் அதற்கு 'பார்னம் உத்தி' என்றே பெயர்வந்துவிட்டது. ஜோதிடம் சொல்கிறார்கள் அல்லவா? அவர்களுக்கு இந்த உத்திதான் உபயோகமாக இருந்து வருகிறது.

ஒருவிஷயத்தை ஒருவருடைய கோள் நிலைகள் அல்லது கையெழுத்து நிரூபிப்பதாக அவரிடம சொன்னால் அதை நம்பிவிடுவார். ஆனால் அந்த விஷயம் நல்லதாக இருக்க வேண்டும். ஆதரவானதாக இருக்கவேண்டும். உடன்பாடானதாக—நேர்மாறானதாக இருக்க வேண்டும். 'எட்டாம் இடத்தில் குரு, ஒன்பதாம் இடத்தில் சனி... எனவே, நீங்கள் ஒரு பெரிய மேதையாகத்தான இருக்க வேண்டும், என்று சொல்லிப் பாருங்கள். கேட்கிறவருக்கு அதை மறுக்க மனதுவராது. ஒருமாதிரியாகத் தலையை ஆட்டுவார்.

உடனே தொடர்ந்து... என்ன கொஞ்சம் முன்கோபம் அதிகம். ஆனாலும் அது உடனே மறைந்து விடும். 'இப்படிச் சில அற்பவிஷயங்களைச் சொன்னாலும் அதையும் மறுக்காமல் ஏற்றுக் கொள்வார்,' நீங்கள் சொல்வது சரிதான்' என்பார். ஆளுமையை எடைபோடுகிற, ஒரு நிறுவப்பட்ட உத்தியின் மூலமாகத் தன்னுடைய குணாதிசயங்கள் கண்டுபிடிக்கப்பட்டதாக அவர் நம்புவது தான் இதற்கு காரணம்.

'இந்தமாதம் பணத் தட்டுப்பாடு கொஞ்சம் இருக்கும். உடம்பிலே ஏதாவது அசௌகரியம் இருக்கும், வீட்டுக்குள்ளே லேசாகக் கருத்து வேறுபாடுகள் வரலாம்' இது மாதிரிப் பொதுப்படையாகச் சிலவற்றைச் சொல்லிப்பாருங்கள்... மக்களைச் சுலபமாக நம்பவைத்து விடலாம். இவைகள் நமக்கு மட்டும் தான் ஏற்படுகின்றன என்று அவர்கள் நினைப்பதுதான் அதற்குக் காரணம். இதுதான் 'பார்னம்' உத்தி;

மனிதர்கள் பாராட்டுக்களை விரும்புகிறார்கள். விமர்சனங்களை வெறுக்கிறார்கள். இது 'பார்னம்' உத்தியின் இன்னொருகூறு, எனவே, ஒருவருக்குச் ஜோதிடம் சொன்னாலும் சரி, அவருடைய ஆளுமையை மதிப்பிடுவதாக இருந்தாலும் சரி அவரை புகழ்கின்றமாதிரி அது அமைய வேண்டும். அது சாரியாகத்தான், இருக்கும் சாதகமான செய்திகளை அதிகமாகவும், பாதகமான செய்திகளை நாசூக்காகவும் சொன்னால் மக்கள் நம்பிவிடுகிறார்கள். நாம் சொல்வதை அப்படியே ஏற்றுக்கொள்கிறார்கள். ஒருவரைப் பார்த்துக் 'கருமி' என்று சொன்னால் அவர் அதை ஏற்றுக்கொள்ளமாட்டார். அதையே கொஞ்சம் மாற்றி 'சிக்கனமானவர்' என்று சொல்லிப்பாருங்கள். 'நீங்கள் சொல்வது சரிதான்' என்பார். 'நீங்கள் பெரிய செலவாளிதான். ஆனால் நல்ல காரியங்களுக்குத்தான் செலவழிப்பீர்கள்' என்று சொல்ல வேண்டும். இப்படியாக இந்தப் 'பார்னம்' உத்தியைக் கடைப்பிடித்து இன்றைக்கு வெற்றிகரமாகக் காலந்தள்ளிக் கொண்டிருக்கிறவர்கள் நிறையப்பேர்.

ஒரு கதை உண்டு. ஓர் ஊரில் ஒரு மன்னர் இருந்தார். அவர் ஒருநாள் தமது அரண்மனை ஜோதிடரைக் கூப்பிட்டார். தமது ஜாதகக் குறிப்பை அவரிடம் கொடுத்தார். 'இதைப் பாருங்கள்... என்னுடைய எதிர்காலம் எப்படி இருக்கும் என்பதைச் சொல்லுங்கள்' என்றார். ஜோதிடர் அதை வாங்கிப் பார்த்தார். கிரகநிலைகளை ஆராய்ந்து பார்த்தார். பின்பு சொன்னார், 'மன்னா! உன்னுடைய உறவினர்கள் எல்லாரும் உனக்கு முன்பாகவே இறந்துவிடுவார்கள். நீ உனது கைகளாலேயே அவர்களுக்கு இறுதிச் சடங்குகள் செய்யவேண்டி வரும்' என்றார்.

இதைக் கேட்டதுதான் தாமதம், மன்னருக்குக் கோபம் வந்துவிட்டது. ஏனென்றால் உறவினர்கள் மீது அவருக்கு மிகுந்த பாசம். அவர்களைப்பற்றி இவர் இப்படிச் சொல்கிறாரே என்கிற கோபம். உடனே கையைத் தட்டிச் சேவகர்களைக் கூப்பிட்டார். 'இந்த ஜோதிடருக்கு ஆயுள் தண்டனை வழங்குகின்றேன். இவரைச் சிறையில் அடையுங்கள்' என்று உத்தரவு போட்டுவிட்டார். பிறகு மற்றொரு ஜோதிடரை அழைத்துவரச் செய்தார். அவரிடம் ஜாதகக் குறிப்பைக் கொடுத்து எதிர்காலம் எப்படி என்பதைப் பார்த்துச் சொல்லுங்கள்' என்றார்.

அவர் பார்த்தார், பிறகு சொன்னார். மன்னா! உங்களுடைய ஜாதகம் மிகவும் நல்ல ஜாதகம். உங்கள் உறவினர்கள் எல்லாரையும்விட நீங்கள் அதிக காலத்துக்கு வாழ்வீர்கள் என்றார். இதைக் கேட்டதும் மன்னர் முகத்தில் மகிழ்ச்சி.

இந்த ஜோதிடருக்கு நிறைய வெகுமதிகள் கொடுத்து அனுப்பினான், அந்த மன்னன், இப்போது கொஞ்சம் யோசித்துப் பாருங்கள். இரண்டு ஜோதிடர்களும் சொன்ன செய்திஒன்று தான், ஆனால் ஒருவருக்குக் கிடைத்தது, ஆயுள் தண்டனைஇன்னொரு

(6ம் பக்கம் பார்க்க)

# இலங்கை பணியாளர் பாதுகாப்பை குவைத் நாடு உறுதி செய்தது

(கொழும்பு)

இலங்கைவந்துள்ள குவைத் தேசிய மக்கள் அவையின் தூதுக் குழுவினர் தமது நாட்டில் கடமையாற்றும்இலங்கையர்களின் பாதுகாப்பை உறுதி செய்துள்ளனர்.

தூதுக்குழுவின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான அல்குரோசி யெம்தமது நாட்டிற்கு வந்து அங்குள்ள நிலைமைகளை நேரில் பார்வையிடுமாறு இலங்கை அமைச்சரவை தூதுக்குழுவினருக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

வெளிவிவகாரஉதவிஅமைச்சர் லால் தர்மசிறி கமகேயை சந்தித்த போது இவ் அழைபபை விடுத்தார்.

குவைத்தில் பணியாற்றும் வெளிநாட்டவரில் இலங்கையர்கள்இரண்டாவது இடத்தில் உள்ளனர்ஒருலட்சத்து60 ஆயிரத்திற்கு மேற்பட்ட இலங்கையர்கள் குவைத்தில் பணியாற்றுகிறார்கள்என்று குறிப்பிட்டார்.

கடல் கடந்து பணியாற்றும் இலங்கை தொழிலாளர்களிற்கு சமூகநலன் துறைவசதிகள் வழங்குவது பற்றியும் இச் சந்திப்பில் ஆராயப்பட்டது.

இதேவேளை, சபாநாயகர் யோசப் மைக்கல் பெரேராவும் குவைத்தூதுக் குழுவினரை பாராளுமன்றச் கட்டடத்தில் சந்தித்துள்ளார்.

இலங்கை வந்துள்ள குவைத் தூதுக்குழுவினர் இலங்கை சிறந்த உல்லாசப் பயணத்தலம் என்று தமது நாட்டில் பிரசாரம் செய்யப்போவதாக உறுதியளித்துள்ளார்.

(உ-10)

# இரரசி பலன்

12-10-2002
(புரட்டாதி26,சனி)
சப்தமி பி. இ 4.47 வரை
மூலம் மாலை 6.23 வரை
இராகு காலம்- 9 02-10: 32
நல்ல நேரம்- 3.02-4 32
நான்காம் புரட்டாதிச் சனி,
சரஸ்வதி பூசை ஆரம்பம்

**மேடம்**
தொழிலில் புதிய சிந்தை, செல்வாக்கு, காரிய தாமதம், திடீர் பயணம்.

**இடபம்**
காரிய தடங்கல், விருந்தோம்பல், கௌரவக்குறைவு, வீண்தொல்லை;

**மிதுனம்**
அபூர்வ சந்திப்பு, குடும்பத்தில் மகிழ்ச்சி, காரிய அனுகூலம், பொருள் சேர்க்கை;

**கடகம்**
நல்ல காரியம், சுவாரஸ்யம், பகைவர் நேசம், தொழில் விருத்தி;

**சிங்கம்**
சிறு வியாதி, முயற்சி தாமதம், வியாபார நன்மை, தாழ்ந்த சுபாவம்.

**கன்னி**
மாணவர் கல்வியில் ஆர்வம், அற்பர் உறவு, மனச்சஞ்சலம், காரிய தாமதம்.

**துலாம்**
இனிய சம்பவம், தனவரவு, பிரயாண நன்மை, கூட்டு முயற்சி;

**விருச்சிகம்**
எதிர் பாராத நன்மை, தேவையற்ற விவாதம், முயற்சி தாமதம், பெரியோர் உதவி.

**தனுசு**
கற்பனை மிகுதி, புதிய பொருள் சேர்க்கை, சயன சுகம், முயற்சி பலிதம்.

**மகரம்**
உணர்ச்சி வசப்படல், உறவினர் வருகை, தொழில் கஷ்டம், பிரயாணக் கஷ்டம்.

**கும்பம்**
கீர்த்தி, எடுத்த காரியம் கை கூடும், தனலாபம், கலந்துரையாடல்.

**மீனம்**
பிறர் உதவி, தர்மம், உற்சாகம், நல்ல செய்தி.

(பழைய நேரப்படிகணிப்பிடப்பட்டது)

வளவன்

# காக்கைதீவு மாதிரிக் கிராமத்திற்கு விரைவில் மின்சாரம்

(சுதுமலை)

ஆனைக்கோட்டை காக்கைதீவுப் பகுதியில் அமைக்கப்பட்ட மாதிரிக்கிராமத்திற்கு இதுவரை மின் விநியோகம் வழங்கப்படவில்லை.

இது தொடர்பாக கடந்த திங்கட்கிழமை வலி. தென்மேற்கு பிரதேச செயலர் பிரிவில் நடைபெற்ற பிரதேச ஒருங்கிணைப்பு குழுக்கூட்டத்தில் பிரதேச செயலர் நா.வேதநாயகனுக்கு சுட்டிக் காட்டப்பட்டது.

இப்பகுதிமின்விநியோகத்திட்டத்திற்கென சென்ற மாதம் 3 லட்சத்து 50 ஆயிரம் ரூபா இலங்கைமின்சாரசபைக்குவலி தென்மேற்கு மானிப்பாய் பிரதேசசபையில் வழங்கப்பட்டுவிட்டதுஎனவும் அங்கு தெரிவிக்கப்பட்டது.

விரைவில் இந்தப்பகுதிக்கு மின்சாரம் வழங்க நடவடிக்கை எடுக்கும்படி இலங்கை மின்சாரசபை அதிகாரிக்குபிரதேசசெயலரால் அறிவுறுத்தப்பட்டது.

40 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் இந்த காக்கைதீவு மீனவ மாதிரிக்கிராமத்தில் வசித்துவருவது குறிப்பிடத்தக்கது.

(உ-252)

# சட்டவிரோதமாக ஆயுதம் வைத்திருந்த நபர் கைதானார்

(புத்தளம்)

சட்ட விரோதமாக ஆயுதம் வைத்திருத்த நபரொருவரை மாரவில பொலிஸார் கைது செய்துள்ளனர்.

மாரவில பொலிசாருக்கு கிடைத்த தகவலொன்றை அடுத்து மாதம்பை சாகரகம பகுதி வீடொன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்தநிலையில், இத் துப்பாக்கியை கைப்பற்றியதுடன், சந்தேக நபரைக் கைது செய்துள்ளதாக மாரவில பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி கினமன்பெர்ணான்டோ தெரிவித்துள்ளார்.

கைது செய்யப்பட்ட நபரை மாரவில நீதிவான் சிவபாதசுந்தரம் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்ட போது, இவரை தடுப்புக் காவலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

(உ)

# இறந்த பெண்ணின் சடலம் உருக்குலைந்த நிலையில் உறவினர்களிடம் கையளிப்பு

(கிளிநொச்சி)

வவுனியா ஆதாரவைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டபெண் ஒருவர் அங்கு மரணமடைந்த செய்தி தாமதமாகவே உறவினருக்கு அறிவிக்கப்பட்டதால் சடலத்தைப் பொறுப்பேற்கச் சென்றபோது அது உருக்குலைந்த நிலையில் இருப்பதைக் கண்டு உறவினர் அதிர்ச்சியடைந்தனர்.

இச் சம்பவம்பற்றி தெரிவிக்கப்படுவதாவதுகடந்த29ஆம் திகதி கிளிநொச்சியில்இருந்து யூனியன்குளம், கிளிநொச்சி வாசியான நேசமலர் (வயது 54) என்பவர் வவுனியாவைத்திய சாலையில்சிகிச்சைபெறச் சென்றவேளை அங்கு மரணமானார். இவர் இறந்து 4 தினங்கள் கழித்தே உறவினர்களுக்கு தகவல் அனுப்பப்பட்டது.

மிகவும் வறுமை நிலையில் உள்ள குடும்பமானதால் இலங்கை செஞ்சிலுவை சங்க கிளிநொச்சி கிளையின் உதவியை நாடி சங்க வாகனத்தில் வவுனியா வைத்தியசாலைககு சடலத்தை பொறுப்பேற்க சென்ற போது அங்கு சடலம் மிக மோசமாக பழுதடைந்திருந்ததை கண்டு அதிர்ச்சியும் கவலையும அடைந்த உறவினர்கள் சடலத்தை வவுனியாவிலே புதைத்துவிட்டு செஞ்சிலுவை வாகனத்தில் கிளிநொச்சி திரும்பினர்.

இச் சடலத்தை பாதுகாக்க வைத்தியசாலை நிர்வாகம் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

(உ)

# மீளக் குடியமர்ந்தோரை மழை குடியெழுப்பியது

(காரைநகர்)

காரைநகர் தோப்புக்காடு பகுதியில் மீளக்குடியமர்ந்த சுமார் 10 குடும்பங்கள் பெய்து வரும் மழை காரணமாக குடியெழும்பி உறவினர் வீடுகளில் தஞ்சமடைந்துள்ளனர்.

யுத்தம் காரணமாக சேதமடைந்த இவர்களது வீடுகள் திருத்தப்படாமையால் மழை வெள்ளம் வீட்டினுள் புகுந்ததன் காரணமாகவே இக் குடும்பங்கள் வேறிடங்களுக்குச் சென்றுள்ளன.

(உ-246)

# குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்த அவசர திட்டங்களை வகுக்கவேண்டும்

## அஸ்கிரிய, மல்வத்த பீடாதிபதிகள் பொலிஸ்மா அதிபரிடம் கூட்டாக வேண்டுகோள்

(கொழும்பு)

நாட்டில் அதிகரித்து வரும் குற்றச் செயல்களை கட்டுப்படுத்துவதற்கு வேண்டிய அவசரத் திட்டங்களை வகுத்து செயற்படுமாறு புதிதாக பொலிஸ்மா அதிபராக நியமிக்கப்பட்டிருக்கும் ரீ.ஈ. ஆனந்தராஜ விடம் மல்வத்த, அஸ்கிரியபீடங்களை சேர்ந்த மகாநாயக்க தேரர்கள் கேட்டுக் கொண்டுள்ளனர்.

புதிய பொலிஸ் மா அதிபர் மனைவி சகிதம் மகாநாயக்க தேரர்களிடம் ஆசிபெறச் சென்றபோதே தேரர்கள் மேற்படி வேண்டுகோளை விடுத்துள்ளனர்.

வீதியால் நடந்துபோவதே பாதுகாப்பற்றதாக மாறிவிட்டது. அந்த அளவுக்கு குற்றச் செயல்கள் மலிந்து விட்டன. இதனைக் கட்டுப்படுத்துவதற்கு பொலிஸர் மட்டுமன்றி அரசியல் வாதிகளும் பொறுப்பானவர்கள் என்று ரம்புகவெல விபஸ்சி தேரர் கூறி பொலிஸ்மா அதிபரிடம் தனது ஆதங்கத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

இதேபோன்ற கருத்தையே தெரிவித்த புத்தரகித்த தேரர் அண்மைக்காலமாக அதிகரித்துவரும் வீதிவிபத்துகளை கட்டுப்படுத்துவதில் முக்கிய கவனம் செலுத்தப்படல் வேண்டும் என்று சுட்டிக் காட்டினார்.

இப்பதவிக்கு முற்றிலும் பொருத்தமானவர் இவரே என்று வாழ்த்திய தேரர், ஒரு இந்துசமயத்தவரான இவர் பௌத்தத்தின் மீது பெருமதிப்பு கொண்டிருக்கிறார் எனத்தெரிவித்தார்.

பதில் பொலிஸ்மா அதிபராக விருந்த போது தலதா மாளிகையின் பாதுகாப்பை பலப்படுத்த ஆவன செய்தமைக்காக அங்கு பிரசன்னமாயிருந்த தியவத்ன நிலமே நிரஞ்சன் விஜயரத்ன நன்றிகளை தெரிவித்தார்.

பொலிஸார் பின்பற்றுவதற்கென்றுதான் ஒரு புதிய கொள்கைத்திட்டமொன்று வகுத்திருப்பதாகஅங்கு கூறிய ஆனந்தராஜா, பொலிஸாரினால் மட்டும்இவற்றை நிறைவேற்ற முடியாது, மக்களினதும் மதகுருமாரினதும் ஒத்துழைப்பும் அவசியம் எனவும் தெரிவித்தார். (உ)

## வாணிவிழா

(யாழ்ப்பாணம்)

நல்லூர் இளங்கலைஞர் மன்ற வாணி விழா நாளை மாலை 4.30 மணிக்கு மன்ற கலாமண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இதேவேளை, இளங்கலைஞர் மன்றம் நடத்தும் புதிய இசை வகுப்புகள் எதிர்வரும் 15 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 5 மணிக்கு ஆரம்பமாகவுள்ளன. (உ)

## இன முரண்பாடுகளை நீக்கும் கல்வி அறிவூட்டல் கருத்தரங்குகள்

(ஈச்சமோட்டை)

காணாமல்போனோர் படையினரின் பாதுகாவலர் சங்க அனுசரணையுடன் பொதுமக்களிடையே இன முரண்பாடுகளை நீக்குவதற்கான கல்வி அறிவூட்டல் யாழில் இடம்பெற்றுவருகிறது.

தென்னிலங்கையிலிருந்து வருகைதந்துள்ள சமூகசேவையாளர்கள், கல்விமான்கள், மதப்பெரியார்கள் உள்ளடங்கிய 9 பேர் கொண்ட குழு, யாழிலிருந்து இணைந்துள்ள 9 பேர் கொண்ட குழுவுடன் சேர்ந்து பண்டத்தரிப்புதியான இல்லத்தில் நேற்று முதல் இக கருத்துப்பரிமாறல்களை மேற்கொளகின்றது.

கடந்த சனிக்கிழமை இக்குழுவினர் வடக்கு-தெற்கு பல்கலைக்கழக கல்விமான்களுடன் இக்கருத்துப்பரிமாறலை நடத்தியிருந்தனர்.

இனிவரும் காலங்களிலும் பல்வேறு மட்டங்களில் இக் கருத்துப் பரிமாற்றங்களை நிகழ்த்தி இன முரண்பாடுகளைதீர்த்து, ஆரோக்கியமான சமுதாய வளர்ச்சியில் பங்குவகிக்க போவதாக இக்குழுவினர் தெரிவித்துள்ளனர். (உ-59)

## பட்டதாரிகளுக்கு வன்னியில் வேலைவாய்ப்பு

(யாழ்ப்பாணம்)

வணிகமாணி, தொழில் நிர்வாகமாணி, கணக்கியலும் நிதிமாணி, உயர்தேசிய கணக்கியல் டிப்ளோமா (எச் என். டி. ஏ) உயர் தேசிய வணி டிப்ளோமா (எச். என். டி. சி) பொருளியல் சிறப்பு பட்டதாரிகளில், வன்னியில நிர்வாக நிறைவேற்று பணிகளுக்கு பணியாற்ற விருப்பமுள்ளவர்கள் தமது பெயர்களை நாளை ஞாயிற்றுகிழமை காலை 9.30 க்கு யாழ். மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தில் பதிவுசெய்யலாம் எனவும்,

தொழில் அமைச்சின் தொழிலவாய்ப்பு விண்ணப்படிவத்தை பெற்றுக்கொள்ளலாம் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (உ)

## நாளை கொழும்பில் கராத்தே போட்டி

(சுண்டிக்குளி)

சோட்டோகான் கராத்தேடு இன்ரநஷனல் பெடரேசன் ஸ்ரீலங்கா கிளை தேசிய உள்ளக மட்ட கராத்தே போட்டி ஒன்றினை நாளை கொழும்பில் நடத்தவுள்ளது.

இதில் பங்குபற்ற இலங்கையின் சகல பாகங்களிலிருந்தும் பல நூற்றுக்கணக்கான கராத்தே வீரர்கள் விண்ணப்பித்துள்ளனர்.

இப்போட்டியில் பங்குபற்றுவதற்காக யாழ்,கிளையில் இருந்து,அதன் பிரதம ஆசிரியர் சென்சேய் ரஞ்சித் சைலேந்திரகுமார் தலைமையில் 7பேர் கொண்ட குழு கொழும்பு சென்றுள்ளது.

கமலதாஸ் நாச்பவான்-கவிசங்கர்,பிரபாகரன்,செந்தூரன்,பிறேம்குமார், நிலோயன் ஆகியோர் இக்குழுவில் அங்கம் வகிக்கின்றஏனையோராவர். (உ-110)

## கிழக்குத் திமோரில் அநாதரவாகத் தவித்த இலங்கையர்நாடுதிரும்பினர்

(கொழும்பு)

சட்டவிரோதமாக நியூசிலாந்து சென்ற வேளை, கிழக்குத் திமோரில் அநாதரவாக இறக்கி விடப்பட்ட இலங்கைய 58 பேருமநேற்று முனதினம ஐக்கிய நாடுகள சபையின் உதவியுடன் தாயகம் வந்தடைந்தனர்.

கடந்த யூன் மாதம் 22 ஆம் திகதி தங்கல்ல குடாவலப பிரதேசத்தில் இருந்து புறபபட்ட இவர்கள், பயணத்திற்காக ஒவ்வொருவரும் தலா ஒரு லட்சம் ரூபா முதல் ஒன்றரை லட்சம் ரூபா வரை கட்டணமாக செலுத்தியதாககூறப்படுகிறது.

இவர்கள் நாடு திரும்பிய போது பணடார நாயக்க சர்வதேச விமான நிலையத்தில வைத்து பொலிஸாரால் விசாரிக்கப்பட்டபின் தத்தமது வீடுகளுக்குச் செல்ல அனுமதிககப்பட்டனர். (உ-10)

## பல்கலையில் சிறப்புக்கலை நிகழ்ச்சிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ். பலகலைக்கழகத்தில் இன்று இடம்பெறவுள்ள பட்டமளிப்பு விழாவினையொட்டி, யாழ். பல்கலைக்கழகஇராமநாதன் நுண்கலைக்கழக இசை, நடனத்துறைகள் இணைந்து வழங்கும் சிறப்புக்கலை நிகழ்ச்சிகள் நாளை காலை 9.00 மணி முதல் கைலாசபதி கலையரங்கில் இடம்பெறவுள்ளன. (உ)

## வர்த்தகத்துறை அமைச்சர் வெளிநாடுகளுக்கு விஜயம்

(கொழும்பு)

வர்த்தக நுகர்வோர் விவகாரஅமைச்சர் ரவி கருணாநாயக்கா வெளிநாடுகளுக்கான10நாள்விஜயமொன்றை மேற்கொண்டுளளார்.

இலங்கையில் வெளிநாட்டு வர்த்தகத்தை மேலும்விருத்தி செய்யும் நோக்குடனேயே இவரது வெளிநாடுகளுக்கான பயணம் அமைந்துள்ளது.

தாய்லாந்து, வியட்நாம், சீனா, ஜப்பான் ஆகிய நாடுகளுக்கு விஜயம் செய்யவுள்ள அமைச்சர், அங்கு இலங்கையுடனான வர்த்தக உறவுகளை வலுப்படுத்துவதுடன், இருதரப்பு வர்த்தக செயற்பாடுகள் தொடர்பாகவும் பேச்சுவார்த்தை நடத்துவார் என அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (உ-8)

## வைத்தியசாலைக்கு எதிராக 2 வயதுக் குழந்தை வழக்குத் தாக்கல்

(கொழும்பு)

கொழும்பு காசில வீதிமகப்பேற்று வைத்தியசாலைக்கெதிராக, இரண்டுவயதுகுழந்தையொன்று கொழும்புமாவட்ட நீதிமன்றில் வழககுத் தாக்கல் செய்துளளது.

தனக்கு 50 மில்லியன் ரூபா நட்டஈடு பெற்றுத் தருமாறு தனது கோரிக்கையை முன்வைத்துள்ளது.

ரவீந்திரநத்தாபரேஎன்பவரின் இரண்டு வயது குழந்தை ஹரிந்தி தாபரே காசிற் மேற்படி வைத்தியசாலையிலகடந்த 2001-3-14 ஆம் திகதிபிறந்த இக் குழந்தை இப்போதுவாய் பேச முடியாதத வு தூண்டல்கள் எவற்றிற்குப துலங்கல்களை காட்ட முடியாததாகவும் உள்ளதுடன் இடைக்கிடை காக்காய் வலியும் வருகிறது.

இக்குழந்தை பிறந்த போது இதயத்துடிப்பு,கருவிகள்மூலம் கண் காணிக்கப்படவில்லை. மகப்பேற்றின் போதுவழங்கப்பட வேண்டிய உதவிகள்வழங்கப்பட்டிருக்க வில்லை மொத்தத்தில் வைத்தியசாலை பணியாளரால் தான் கவனிக்கப்பட்டிருக்க வில்லை என அம்மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்மனுதாரர்களாகவைத்தியசாலைப பணிப்பாளர், சுகாதார அமைச்சின் செயலாளர், சட்டமா அதிபர் ஆகியோர் குறிப்பிடப்பட்டுளளனர். (உ)

## வெற்றியின்

வருக்குக்கிடைத்ததுவெகுமதி, என்ன காரணம்? இரண்டாவது ஜோதிடர் சரியான உத்தியைக்கையாண்டார் அவ்வளவுதான்.

இந்த உலகத்திலே ஒவ்வொரு நிமிடமும் ஓர் ஏமாளி பிறந்து கொண்டே இருக்கிறான என்பது பீனியஸ் பார்னம்.அவர்களுடையநம்பிக்கை என்றுசொனனோம்அல்லவா? அந்த நம்பிக்கை இந்த நூற்றாண்டிலும் தொடர்கிறது.எந்த நூற்றாண்டிலும் தொடரும் ஒருவர்தன்னுடையமேலதிகாரியிடம்போய், ஐயா!ஒருநாள் லீவுவேண்டும் ...என் தங்கச்சிக்குக்கல்யாணம் என்றார், அவர் பார்த்தார், ஒரு பத்து நிமிடம் வெளியில் இருங்கள என்றார் பத்துநிமிடம் கழித்துக்கூப்பிட்டார்.

''இதோபாருங்கள் நீங்கள் சொலவது பொய்! இப் போதுதான் உங்கள் தங்கச்சிக்குப் போன் பண்ணினேன், அவள் தனக்கு இரண்டு வருஷத்துக்கு முன்னரே, கல்யாணம் ஆகி விட்டதாகச் சொல்கிறாள் என்றார். உடனே இவர் சொன்னார், சார் ,நீங்கள் சொல்வதும் பொய்யாகத்தான் இருக்க வேண்டும். ஏனென்றால் எனக்கு ஒரு தங்கச்சியேகிடையாதுஎன்று.

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

## பெற்றோலியப் பொருள் விநியோகத்துக்கு நிறுவனங்களுக்கு அனுமதி

(கொழும்பு)

பெற்றோலியப் பொருட்களின் உற்பத்தி மற்றும் விநியோகத்துக்கென இரு நிறுவனங்களுக்கு அனுமதி வழங்க நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டுள்ளதாக மின்சக்தி, எரி பொருள்துறை அமைச்சர் கரு ஜெயசூரியதெரிவித்துள்ளார்.

பெற்றோலியப் பொருள்களின் உற்பத்திகுறித்தவிசேட ஒழுங்குகள் தொடர்பான சட்டமூல விவாதத்தின் போதே அமைச்சர் பாராளுமன்றத்தில் இவ்வாறுதெரிவித்துள்ளார்.

இவ்அனுமதி தொடர்பாக ஏற்கனவே ஒரு நிறுவனம் தெரிவு செய்யப்பட்டுவிட்டதாகவும், மற்றொன்று விரைவில் தெரிவு செய்யப்படும்எனவும் தெரிவித்துள்ளார். (உ-8)

## சிறைச்சாலை அதிகாரிகளுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை

(கொழும்பு)

உதவிச்சுங்க அத்தியட்சகர் சுஜித்பிரசன்ன பெரேரா கொலை வழக்கின் பிரதிவாதிகளுக்கு பொறுப்பாக இருந்த சிறைச்சாலை அதிகாரிகளுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்குமாறு மேல் நீதிமன்றம் சிறைச்சாலை ஆணையாளருக்கு உத்தரவிட்டுள்ளது.

கடந்த யூன் மாதம் 28 ஆம் திகதியன்று மேற்படி பிரதிவாதிகளை நீதிமன்றில் ஆஜர் செய்தபோது சிறைச்சாலை அதிகாரிகள் தங்கள் கடமைகளை பொறுப்பாக செய்யவில்லை என குற்றம் சாட்டியே மேல்நீதிமன்றம் இவ்வாறு உத்தரவிட்டுள்ளது.

இக்கொலை வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட மூன்று நபர்களுக்கும் கொழும்பு உயர் நீதிமன்றம் மரணதண்டனை விதித்து தீர்ப்பளித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-8)

# யாழ். பல்கலைக்கழகத்தில் கௌரவ பட்டம் பெறுகின்ற கல்வியாளர்கள்

## ஆ. சபாரத்தினம்

தமிழ், ஆங்கிலம், வடமொழி ஆகிய மும்மொழிகளிலும் நிறைந்த அறிவும் சைவசித்தாந்த நெறி நின்று ஒழுகும் ஆசார சீலமும் ஒருசேர வாய்க்கப் பெற்ற நல்லறிஞர் ஆ.சபாரத்தினம் அவர்கள், யாழ்ப்பாணம் ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்க வகுப்புகளிலே, சமஸ்கிருதம், திருக்குறள், தமிழ் இலக்கிய வரலாறு ஆகிய பாடங்களைத் திறம்படக் கற்பித்து வந்தவர் என்பதை நன்றியுடன் நினைவு கூர்கின்றேன். மாணாக்கரின் புறம் புறம் திரிந்து அவர்களைப் போஷித்தும், நூல்கள் வழங்கியும், ஊக்கியும், உற்சாகம் வழங்கியும் தாம் ஓர் இலட்சிய ஆசிரியர் என நிலை நாட்டியவர் இப்பொருந்தகை.

பண்டிதமணி சி.க.அவர்களின் தொண்டராய்ச் சில ஆண்டுகள் விளங்கி அவர் மூலம், மௌன தவமுனிவரான, பொ.கைலாசபதி அவர்களின் ஞானச்சுடரின் மகிமையை உணர்ந்து அவரின் தத்துவங்களை சைவ அறிஞர் உலகிற்கு செறிய வைப்பதற்காய் தமது உடல், பொருள் யாவையுமே அர்ப்பணித்து அயராது உழைத்து வருகிறார் ஆ.சபாரத்தினம்.

ஒரு காலத்தில்தமது ஆங்கில அறிவைப் பயன் செய்து தமிழ் இலக்கியத்தின் நவீனத்துவம் பற்றியும், ஆங்கில அறிவியல்சார் புதுமைகள் பற்றியும் வீரகேசரி முதலிய பத்திரிகைகளிலேயே அரிய கட்டுரைகள் பல எழுதியும் பேசியும் வந்தவர் இவர். ஆனால் இன்று மௌனதவ முனிவர்க்கே ஆட்பட்டு அவர் வழி துலங்க முனைந்து உழைப்பது குறிப்பிட்டுக் கூற வேண்டிய ஒன்றாகும்.

நல்லறிஞர் சபாரத்தினம் அவர்களுக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், கலை வல்லார் (Master of Arts) என்ற கௌரவப்பட்டத்தினை இவ்வாண்டு வழங்கிக் கௌரவிக்கின்றது.

யாழ்ப்பாணம் ஆரியதிராவிட பாஷாபிவிருத்திச் சங்கத்தின் சார்பில், சபாரத்தினம் அவர்களைப் பாராட்டி மகிழ்கின்றேன்.

*கலாநிதி க. சொக்கலிங்கம்*
*(சொக்கன்)*

## சிவஸ்ரீ கணபதீஸ்வரக் குருக்கள் வைத்தீஸ்வரக் குருக்கள்

1916ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 22ஆம் திகதி காரைநகரில் உள்ள ஈழத்துச் சிதம்பரக் கோவிலில் சிவாச்சாரியாராக விளங்கிய சிவஸ்ரீ கணபதீஸ்வரக்குருக்களின் மகனாகப் பிறந்த சிவஸ்ரீ வைத்தீஸ்வரக்குருக்கள் ஆரம்பக் கல்வியை காரைநகரில் பெற்ற பின் திருநெல்வேலி பரமேஸ்வராக் கல்லூரியில் நடைபெற்று வந்த பண்டித ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் கற்றுத் தமிழ் பண்டிதர் தேர்விலும் பயிற்றப்பட்ட ஆசிரியர் தராதரப் பத்திர தேர்விலும் சித்தி பெற்றார்.

மகாவித்துவான் சி.கணேசையர், சு.நடேசபிள்ளை. பண்டிதமணி ந.சு.நவநீதகிருஸ்ண பாரதியார் போன்ற அறிஞர்களிடத்தில் தமிழ் மற்றும் சமஸ்கிருத குருகுல கல்வியையும் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் ஆசிரியப் பயிற்சியையும் பெற்று 1940 ஆம் ஆண்டு முதல் 1971ஆம் ஆண்டு வரை ஆசிரியராகவும் அதிபராகவும் பணியாற்றியவர்.

விவேகானந்த சபையினர் நடாத்தும் அகில இலங்கை சைவ சமய பாடப்பரீட்சையை நடாத்துவதில் முக்கிய பங்கு வகித்த இவர் 1940இல் காரைநகரிலே மாணிக்கவாசகர் சபையை உருவாக்கி பெரும் பணியாற்றினார்.

காரைநகர் தமிழ் வளர்ச்சிக் கழகத்தை உருவாக்கி தமிழ் அறிஞர்களின் நூல்களை பதிப்பித்ததுடன் உரை எழுதுவித்தும் வெளியிட்டார். நாவலருடன் பணியாற்றி காரைநகர் கார்த்திகேயப் புலவர் இயற்றிய திண்ணபுர அந்தாதி, திருப்போசை வெண்பா ஆகியவற்றிற்கு உரை எழுதுவித்தும் பதிப்பித்துமுள்ளார். நாவலர் பிள்ளைத் தமிழ் என்ற நூலையும், நன்னூற் காண்டிகை உரையும் நாவலர் பெருமானும் என்ற நூலையும் பண்டிதர்களான மு.கந்தையா. F.X.C.நடராசா ஆகியோர் மூலம் ஆக்கிவித்துப் பதிப்பித்த பெருமைக்குரியவர் இவர்.

குருக்கள் அவர்கள் சைவத்திற்கும் தமிழுக்கும் ஆற்றிய பணிகளுக்கு மகுடம் வைத்தாற்போல் அமைவதுதான். நாவாலியூர் பண்டிதர் இளமுருகனார் அவர்களைக் கொண்டு இயற்றுவித்த ஈழத்துச் சிதம்பர புராணமாகும். ஏறத்தாழ எட்டு நூல்களின் ஆசிரியராகவும் பதினைந்து நூல்களின் பதிப்பாசிரியராகவும் பல விழா மலர்களின் தொகுப்பாசிரியராகவும் விளங்கியவர் இவர்.

கோவைகள் - தமிழ் மொழி பகுதி 1, காரைநகர் சைவ சமய வளர்ச்சி ஆகியனவும் அமைகின்றன. தமது சேகரிப்பில் இருந்த பெரும்பாலும் முதற்பதிப்புக்களைக் கொண்ட 5000 தமிழ் நூல்களை காரைநகர் மணிவாசகசபைக்கு குருக்கள் அவர்கள் வழங்கியுள்ளமையும் போற்றத்தக்கது.

*பேராசிரியர் சி.க.சிற்றம்பலம்*

## பேராசிரியர் செல்லத்துரை பாலச்சந்திரன்

முன்னாள் கலைப்பீடாதிபதியும் கீர்த்தி மிக்க விரிவுரையாளரும் எளிமையும கருணையும் நிரம்பியுள்ளவருமான அமரர் பேராசிரியர் பாலச்சந்திரன் அவர்களைத் தேகாந்த நிலையில் கலாநிதிப்பட்டம் அளிப்பதற்காக அறிமுகம் செய்து வைப்பதில் நான் பெருமைப்படுகின்றேன்.

பேராசிரியார் பாலச்சந்திரன் வேலணையில் 1942 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 11 ஆம் திகதி பிறந்தார். இவர் தனது இளமைக்காலக் கல்வியை சேர்.வைத்திலிங்கம் துரைசாமி மகா வித்தியாலயத்தில் பெற்ற பின் 1963 ஆம் ஆண்டு இலங்கைப் பல்கலைக்கழகம், பேராதனைக்கு அனு மதி பெற்று அங்கு 1967ஆம் ஆண்டு புவியியலில் சிறபபுபத் தேர்ச்சிப்பட்டம பெற்றார். கொழும்பு இலங்கைப் பல்கலைக்கழகத்தில் பேராசியரியர் பாலச்சந்திரன் 1968 ஆம் அண்டு உதவி விரிவுரையாளராக இணைந்து கொண்டார். ஐக்கிய இராச்சியத்தின் பேமிங்ஹாம் பல்கலைக்கழகத்தில் பட்டப்பின் படிப்பை மேற்கொள்வதற்கு பிரித்தானிய சபையால் பிற நாட்டு மாணவர்களுக்கு வழங்கப்படும் புலமைப்பரிசிலை 1973 ஆம் ஆண்டு பெற்றார். இலங்கையின் வரட்சி மாதங்களின் மதிப்பீடு பற்றிய இவரின் ஆராய்ச்சிக் கட்டுரைக்கு பேமிங்ஹாம் பல்கலைக்கழகம் விஞ்ஞான முதுமானிப்பட்டத்தை (M.Sc) வழங்கியது. பட்டம் பெற்ற பின் பேராசிரியர் பாலச்சந்திரன் இலங்கைப் பல்கலைக் கழகம், கொழும் பிற்குத் திரும்பி விரிவுரையாளராகக் கடமையை ஏற்றுக் கொண்டார். மூன்று ஆண்டுகள் இலங்கைப் பல்கலைக்கழகம் கொழும்பில் கடமை யாற்றிய பின்னர் அங்கிருந்து பேராசிரியர் பாலச்சந்திரன் 1978 ஆம் ஆண்டு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராக இணைந்து கொண்டார் 2001ம்ஆண்டுஒக்ரோபர்மாதம் 20 ஆம் திகதி அமரத்துவம் அடையும் வரை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பேராசிரியர் பாலச்சந்திரன் தனது கல்விச சேவையைத் தொடர்ந்தார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் 1982 ஆம் ஆண்டில் சிரேஷ்ட விரிவுரையாளராகவும் 1992 இல் இணைப்பேராசிரியராகவும் பதவி உயர்வு பெற்றார். ஏழு வருடங்கள் புவியியற்றுறைத் தலைவராகவும், ஏறத்தாழ இரு வருடங்கள் கலைப்பீடாதிபதியாகவும் சேவை செய்தார். களனிப் பல்கலைக் கழகத்தில் வருகை விரிவுரையாளராகவும் போரதனைப் பல்கலைக்கழ கத்தினதும் கொழும்பு பல்கலைக்கழகத்தினதும் வெளித் தேர்வாளராகவும் தென்கிழக்குப் பல்கலைக் கழகத்தில் வருகைப் பேராசிரியராகவும் சேவை செய்துள்ளார்.

பல்கலைக்கழகத்தின் ஆசிரியர் சங்கத்தின் தலைவர், யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தினது சமூக விஞ்ஞானப் பிரிவுத் தலைவர், யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் கலைப்பீடதென்னாசிய கற்கைகளுக்கான இலங்கை சஞ்சிகையின் ஆசிரியர் போன்ற தகைமைசார் பதவிகளில் சேவையாற்றியுள்ளார்.

**பேராசிரியர் க.கந்சாமி**

## அமரர் சின்னத்தம்பி சிவபாதசுந்தரம்

தேகாந்த நிலையில் கௌரவ காலாநிதிப பட்டத்தினை வழங்கும் பொருட்டு சி.சிவபாதசுந்தரம் அவர்களை அறிமுகம் செய்வதில் மிக்க மகிழ்ச்சியடைகின்றேன். அளவெட்டியில் 1916ஆம் ஆண்டு மே மாதம் முதலாம் திகதி பிறந்த அமரர் சி.சிவபாதசுந்தரம் தனது ஆரம்பக் கல்வியை மலேசியாவிலுள்ள மக்ஸ்வெல் ஆங்கில பாடசாலையிலே கற்றவேளை ஒவ்வோர் ஆண்டும் சிறப்பு சித்திபெற்று பேறு பெற்ற விக்டோறியாக்கல்வி நிறுவனத்தில் அனுமதி பெற்றார். அங்கு பயிலும் கால் கேம்பிறச்பல்கலைக்கழக மலேசிய பிரதேச பரீட்சையில் அனைத்துப் பாடங்களிலும் சிறப்புத் தேர்ச்சி சித்தி பெற்றார். அங்கிருந்து இலங்கைக்கு மீண்டு கொழும்பு பல்கலைக்கழகத்தில் கற்று ஆங்கிலத்தில் கலைமாணி சிறப்புப் பட்டம் பெற்றார். பட்டப்படிப்பில் அவரது பெறுபெறுகளை கருத்திற் கொண்ட கேம்பிறிச் பல்கலைக்கழகம் அவர் அங்கு கற்பதற்கு புலமைப்பரிசிலை வழங்கியது. கேம்பிறிச் பல்கலைக்கழகத்தில் சிறப்புறக்கற்று முதுகலைமளாணி ரைபோஸ் பட்டத்தைப் பெற்று அவர் இலங்கைக்கு மீண்டார்.

ஸ்கந்தவரோதயாக் கல்லூரியின் அதிபர் பதவியை பெற்றுக் கொண்டார். 1944ஆம் ஆண்டு முதல் 1945ஆம் ஆண்டு வரை வடமாகாண பாடசாலை பரிசோதகராக பணியாற்றினார். 1945ஆம் ஆண்டில் பரமேஸ்வராக் கல்லூரியின் உதவி அதிபராகி அதனைத் தொடர்ந்து அக்கல்லூரியின் அதிபர் பொறுப்பினை ஏற்று அமரர் சேர்.பொன். இராமநாதனது கல்வி சார்ந்த இலட்சியங்களை நடைமுறைப்படுத்தினார். பின் வைத்தீஸ்வரா வித்தியாலயத்தில் அதிபர் ஆனார்.

1971ஆம் ஆண்டு அரச சேவையிலிருந்து ஓய்வு பெற்ற அவர் யாழ்ப்பாண பொதுசன நூலகத்தின் ஆலோசகராகவும் துறைசார்ந்த மதியுரையாளராகவும் நான்கு ஆண்டுகள் பணிபுரிந்தார்.

அவர் வடமாகாண அதிபர் சங்கத்தின் தலைவராகவும் உயர் கல்வி தொடர்பான தேசிய சபையின் தலைவராகவும் யாழ்ப்பாண பல்கலைக்கழக பேரவையின் உறுப்பினராகவும் பணியாற்றிய அவர் யோகர் சுவாமிகளின் அடியவராக விளங்கியதுடன் தமது வாழ்க்கை நிறைவடையும் வரை சிவ தொண்டன் நிலையத்தின் துணைத் தலைவராகவும் தொண்டாற்றினார்.

*பேராசிரியர் சபா. ஜெயராசா*

## பேராசிரியர் நாகலிங்கம் பாலகிருஷ்ணன்

யாழ் பல்கலைக்கழக முன்னோடிகளில் ஒருவரும், புல மைசார்ந்த பொருளியலாளரும், தராதர ஆற்றல் மிக்க அறிவாளரும் திறமை மிக்க கல்வி நிர்வாகியும் ஆகிய பேராசிரியர் நாகலிங்கம் பாலகிருஷ்ணன் அவர்களை கௌரவ இலக்கிய கலாநிதிப் பட்டம் வழங்குவதற்காக அறிமுகம் செய்து வைப்பதில் பெரு மகிழ்ச்சியடைகின்றேன்.

இவர் தமது தொடக்க கல்வியை புலோலி மெதடிஸ்த மஷன் பாடசாலையிலே கற்று இடை நிலைக் கல்வியை பருத்தித்துறையிலுள்ள ஹாட்லிக் கல்லூரியிலே முடித்து பேராதனையிலுள்ள பல்கலைக்கழகத்திலே சேர்ந்து பொரு ளியலை சிறப்புப் பாடமாக கற்றுச் சித்தியடைந்தார். பின்னர் 1960இல் பேராதனை பல்கலைக்கழகத்திலே பொருளியல் துறையில் உதவி விரிவுரையாளராக நியமனம் பெற்றார். பின்னர் இங்கிலாந்திலுள்ள [illegible]ஸ் பல்கலைக்கழகத்திலே தனது பட் டப்பின் படிப்புக்களை மேற் கொண் டார். ''அபிவிருத்தி பொருளி[illegible]லை'' சிறப்பாக ஆராய்ந்து முது தத்துவமானி பட்டத்தை பெற்றுக் கொண்டார் பாலகிருஷ்ணன். இவர் பேரா[illegible]னை பல்கலைக்கழகத்திலே தமிழ் மொழி மூலம் பொருளியலை பயிலும் மாணவர்களுக்கு கற்பித்தலிலே [illegible]கியமான பங்களிப்பினை செய்துள்ளார். பேராதனை பல்கலைக்கழகத்திலே 16 ஆண்டுகளாக சிறப்பாக பணியாற்றிய பின்னரே யாழ்ப்பாண பல்கலைக்கழகத்திலே பணிபுரிவதற்கு தீர்மானித்தார். 1970களிலும் 198[illegible]களிலும் தென்னிலங்கையிலுள்ள பல்கலைக்கழகங்களிலிருந்து யாழ்ப்பாண பல்கலைக்கழகத்திலே சேர்ந்த தமிழ் முதுநிலைப் பல்கலைக்கழக புலமையாளர்களில் இவரும் குறிப்பிடத்தக்கவர்.

இரு தசாப்தங்களாக யாழ்ப்பாண பல்கலைக்கழகத்திலேயே தொடர்ந்து பணியாற்றியுள்ளார். பொருளியற்துறை வர்த்தகம், முகாமைத்துவத்துறை ஆகியவற்றின் தலைவராக விளங்கினார். 1981-1991 வரையுள்ள காலப் பகுதியில் கலைப்பீடாதிபதியாகவும் பல தடவைகள் பதில் துணை வேந்தராகவும் சிறப்பாக பணியாற்றியுள்ளார். அமரர் பேராசிரியர் சு.வித்தியானந்தன் அமரர் பேராசிரியர் அ.துரைராஜா ஆகியோர் துணைவேந்தர்களாக விளங்கிய காலத்தில் இவர் கலைப் பீடாதிபதியாக கடமையாற்றினார். இப்பல் கலைக்கழக மூதவை பேரவை உறுப்பினராக சிறப்பான ஓர் இடத் தை வகித்து வந்துள்ளார்.

பேராசிரியர் பாலகிருஷ்ணன் இலங்கையிலும் வெளிநாடுகளிலும் உள்ள பிரபல சஞ்சிகைகளிலும் ஆய்வேடுகளிலும் தரம்மிக்க பல ஆய்வு கட்டுரைகளை ஆங்கிலத்தில் எழுதியுள்ளார். உள்நா ட்டிலும், வெளிநாடுகளிலும் உள்ள அறிஞர்கள் இவரது கட்டுரைகளை தரமுள்ளதாக கணித்துள்ளனர். சிலவற்றிலிருந்து மேற்கோள்கள் குறிப்பிட்டுள்ளனர். தமிழிலும் இவர் பெருந்தொகையான தரமுள்ள ஆய்வுக் கட்டுரைகளை எழுதியுள்ளார்.

**மா.நடராஜசுந்தரம்**

## தேசமானிய வைத்திய கலாநிதி சுரேந்திரா இராமச்சந்திரன்

பேரறிவு மிக்க கற்றறிவாளரும், தனிச்சிறப்புமிக்க ஆராய்ச்சியாளரும் இலங்கையில் பெரும்புகழ் பெற்ற மருத்துவ, சிறநீரகவியல் நிபுணருமாகிய வைத்திய கலாநிதி சுரேந்திரா இராமச்சந்திரன் அவர்களை அறிமுகப்படுத்துவதில் நான் பெருமையும், மகிழ்ச்சியும் அடைகின்றேன்.

1934 மார்ச் 11ம் திகதி பிறந்த அவர் பாடசாலைக் கல்வியை றோயல் கல்லூரியில் பெற்று அப்போதைய இலங்கைப் பல்கலைக்கழகத்தின் கொழும்பு மருத்துவ பீடத்தில் 1958 இல் எம்.பி.பி.எஸ் பட்டத்தைப் பெற்றார். வைத்திய கலாநிதி இராமச்சந்திரன் பட்டதாரி மாணவர் நிலையில் முதன்மையான பட்டதாரி ஆனார். அவரின் ஆய்வறிவுசார் கல்விப் பதிவு ஒவ்வொரு பரீட்சையிலும் முதலாம் வகுப்பு கௌரவப் பட்டங்கள், பல்வேறு சிறப்புத் தேர்ச்சிகள், தங்கப் பதக்கங்கள் மூன்றாண்டு காலத்தின்போது இறுதி எம்.பி.பி.எஸ் தேர்வின் பெறிகல்விப் புலமைப்பரிசில் படி ஆகியனவற்றை உள்ளடக்கும்.

முதலாவது முறையில் 1961 இல் எம்.டி. (இலங்கை) பரீட்சையில் சித்தியடைந்த ஒரே ஒரு மாணவன். அதன் பின்னர் மிக விரைவில் 1964இல் எம்.ஆர்.சி.பி.(லண்டன்)யையும், எம்.ஆர்.சி.பி (கிளாஸ்கோ) யையும், 1965இல் எம்.ஆர்.சி.பி (எடின்பேக்)யையும் பெற்றார்.

1988இல் இலங்கை வைத்திய நிபுணர்கள் சங்கத்தின் தோழமை உறுப்பினராக தெரிவுசெய்யப்பட்ட வைத்திய கலாநிதி இராமச்சந்திரன் 1991 இல் அமெரிக்க வைத்திய நிபணர் சங்க தோழமை உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டு, தலை சிறந்த கௌரவத்தைப் பெற்றுக்கொண்டார். 1994இல் தேசிய கௌரவ நிரலில் தேசமானிய விருது பெற்றமையும் குறிப்பிடத்தக்கது.

சஞ்சிகைகளில் ஐம்பதிற்கு மேற்பட்ட ஆய்வுக்கட்டுரைகளைப் பிரசுரித்துள்ளார். இலங்கையில் சிறுநீரக ஆராய்ச்சியில் முன்னோடியாகத் திகழ்ந்தார். மார்க்கஸ் பெர்னாந்து பேரூரை, எஸ்.சி.போல் பேரூரை, பி.பி.பெர்னாந்து பேரூரை, யாழ்ப்பாணத்தில் பசுபதி ஞாபகார்த்தப் பேரூரை, சிறில் பர்னாந்து பேரூரை, கண்டியில் பிபிலை ஞாபகார்த்தப் பேரூரை, இராஜசூரியா ஞாபகார்த்தப் பேரூரை, விஜேராம அறக்கொடை விரிவுரை உள்ளிட்ட 14 பேரூரைகளை ஆற்றியள்ளார். பேராசிரியர் கே.எஸ்.குக் அவர்களால் பதிப்பிக்கப் பெற்ற ஆசிய சிறநீரகவியல் எனும் நூலில் ஓர் அத்தியாயத்தை எழுதியுள்ளார். பல சர்வதேச மாநாடுகளில் பல்துறை சார்ந்த ஆராய்ச்சிக் கட்டுரைகளைச் சமர்ப்பித்துள்ளார். மேலும் 1997 இல் அவுஸ்திரேலியா சிட்னியில் நடைபெற்ற சிறுநீரகவியல் பற்றிய சர்வதேச சங்கத்தின் உலக மாநாட்டில் அழைக்கப்பட்ட பேச்சாளராகப் பங்கு பற்றினார்.

அவர் 1958 தொடக்கம் 1994 வரை சுகாதார அமைச்சில் பணியாற்றினார். 1997இல் கொழும்பு பிரதான வைத்தியசாலையில் ஆலோசனை வழங்கும் வைத்திய நிபுணராக நியமனம் பெற்று 1994 இல் ஓய்வு பெற்றார்.

எம்.பி.பி.எஸ், எம்.டி, தேர்வுகளுக்கான பரீட்சகராகவும் அரும்பணியாற்றி வருகின்றார். இலங்கையிலும், வெளிநாடுகளிலுமுள்ள பல ஆய்வறிவு அமைப்புக்களிலும் பணியாற்றி வருகின்றார். 1990இல் இலங்கை வைத்திய சங்கத் தலைவராகவும் பணியாற்றினார்.

அவர் மருத்துவ பீடத்திற்கு பிணியாய்வு மருத்துவத்திற்காக இராமச்சந்திரன் தங்கப்பதக்கத்தையும், இலங்கை மருத்துவ சங்க ஆய்வறிவு அமர்வுகளில் சிறுநீரகவியலுக்கான பரிசிலையும் அளித்துள்ளார்.

**பேராசிரியர் எம்.சிவசூரிய**

4ம் பக்கம் பார்க்க...

# 19-வது அரசியல் சட்டத் திருத்தம்!

# அன்ரன் பாலசிங்கம் அரசுக்கு ஆதரவு தேடுவது கேலிக்குரியது

## பொ. ஐ. மு. பொதுச் செயலாளர் டி. எம். ஜெயரத்ன அறிக்கை

(கொழும்பு)

**19 வது அரசியற் சட்டத் திருத்தத்தை எம். பி. க்கள் ஆதரிக்க வேண்டும் என்று தாய்லாந்துப் பேச்சுக்களின் ஆரம்பத்தில் விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் கூறி, அதற்கு ஆதரவுதேட முயன்றமை ஒரு கேலிக்கூத்து என்று பொ. ஐ. மு வின் பொதுச்செயலாளர் டீ. எம். ஜெயரத்ன அறிக்கையொன்றின் மூலம் தெரிவித்துள்ளார்.**

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது;

ஜனநாயக ரீதியாக தெரிவு செய்ய பட்ட ஒரு அரசாங்கம், அத்தகைய திருத்தத்தை நிறைவேற்றவேண்டும் என்று பாலசிங்கம் கூறுவது பற்றி பொ. ஐ. மு விசனமடைந்துள்ளது.

ஒரு அபிவிருத்திச் சபையின் தேர்தலிலாவது பங்குபற்றியிருக்காத விடுதலைப் புலிகள், மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதியின் அதிகாரங்களைக் குறைப்பதற்கு அரசியற் கட்சிகள் முன்வரவேண்டும் எனக் கோருவதுபோல், பெரிய பகிடி வேறொன்றும் இருக்காது.

ஜனாதிபதியின் அதிகாரங்களை குறைப்பதற்கு ரணில் விக்கிரமசிங்க 19 வது திருத்தத்தை கொண்டுவர முயற்சிக்கும் அதேவேளை, ரணில் விக்கிரமசிங்கவின் கரங்களை பலப்படுத்தவேண்டும் என்று, பாலசிங்கம் கூறுவதை நோக்குர்போது அரசாங்கத்திற்கும் புலிகளுக்குமிடையே இப்போதும் இரகசியங்கள் உள்ளன என்பது தெளிவாகத் தெரிகிறது.

இன்றைய முக்கியமான கட்டத்தில் இருகட்சிகளும் செய்யும் இக்கூட்டுச் சதியை நாம் கண்டிக்கின்றோம் என்றும் அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

### கலந்துரையாடல்

(அச்சுவேலி)

நவிண்டிலில் உள்ளமாவீரர் துயிலும் இல்லம் புனரமைக்கப்படவுள்ளது.

இது சம்பந்தமான கலந்துரையாடல் இன்று பி.ப

(2-ம் பக்கம் பார்க்க)

## வருட இறுதியில் பிரதமர் ஜப்பான் பயணம்

(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா எதிர் வரும் டிசம்பர் 4 ஆம் திகதி ஜப்பான் செல்லவுள்ளார்.

ஜப்பான் அரசு, தற்போது நாட்டில் ஏற்பட்டிருக்கும் சமாதான சூழ் நிலைகளை தொடர்ந்து பல்வேறு உதவி வழங்கிவருகிறது.

இந்த வகையில், சமாதான செயற்பாடுகளுடன், அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காகதேவைப்படும்நிதிகுறித்து ஜப்பானிய அரசுடன் விரிவான பேச்சுவார்த்தையை நடத்துவதற்காகவே பிரதமரின் பயணம் அமைகிறது. (உ-8)

## கடல் வழியாக தொழில் உபகரணங்கள் எடுத்துவர மீனவருக்கு அனுமதி

(மந்திகை)

வடமராட்சிப் பகுதி கடற்றொழிலாளர்கள், வெளியில் இருந்து யாழ். குடாநாட்டுக்கு கடல்வழியாக தொழில் உபகரணங்களை எடுத்து வர இருந்த தடை கடந்த புதன் கிழமை முதல் நீக்கப்பட்டுள்ளது.

பாஸ்நடைமுறை காரணமாக கடந்த 6வருடங்களாக வெளியிடங்களில்இருந்து மீனவர்கள் கடல் வழியாக உபகரணங்களை எடுத்துவர முடியாத நிலைமை காணப்பட்டது.

இதனால் வன்னிப் பெருநிலப்பரப்பில் இருந்து மீளக் குடியமர வந்த மீனவர்கள் பெரும் செலவில் தரைவழியூடாகவே தமது உபகரணங்களை எடுத்துவந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (உ-23)

# தொழில் திணைக்களம் நோக்கி இளைஞர் யுவதிகள் படையெடுப்பு

### கால் கடுக்க வெயிலில் காத்து நிற்பு

(ஈச்சமோட்டை)

யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் இயங்கும் தொழில் திணைக்களத்தில் வேலையற்ற இளைஞர் யுவதிகளைப் பதியும் நடவடிக்கை கடந்த புதன ஆரம்பிக்கப்பட்டதைத் தொடர்ந்து தமது பெயர் விபரங்களைப் பதிவு செய்யும் நோக்கில் பலநூற்றுக்கணக்கில்இளைஞர், யுவதிகள் அங்கு படையெடுப்பதை அவதானிக்க முடிகிறது.

திங்கள், புதன், வெள்ளி ஆகிய நாட்களில் மு.ப 10.00 மணி முதல் 1.00 மணிவரை மாத்திரமே இடம் பெறும்இப் பதிவுகளுக்காக தூர இடங்களில இருந்து பெருமளவில் இளைஞர் யுவதிகள் வருகை தருகின்றனர்.

இருப்பினும் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே அதாவது தினமும் 50 பேர் என்ற அடிப்படையிலேயே பதிவுகள் இடம் பெறுவதால், கால் கடுக்க காத்து நின்ற பின்னர் பலர் ஏமாற்றமுடனும் சலிப்புடனும் வீடுதிரும்புகின்றனர்

நேற்றைய தினம் இப்பதிவுக்காகவீரசிங்கம் மண்டபத்தின் நான்காம் மாடியில் இருந்து பழைய தபால் நிலையமவரை நீண்ட வரிசையில் இளைஞர், யுவதிகள் எரிக்கும் வெயிலையும் பொருட்படுத்தாது காத்து நின்றமையைக் காண முடிந்தது.

இதேவேளை, கடந்தகாலங்களில் தொழில் வங்கிகளுக்கும் கட்சி அலுவலகங்களுக்கும், குறைகேள் செயலமாவுகளுக்கும் மாறிமாறி அலைந்து ஏதொரு பயனுமின்றி மனம் சலித்துள்ளஇவர்களைமேலும் வாட்டாது.

தபாலில அவர்களது விபரங்களை பெற்று பின்னர் அழைப்புக் கடிதங்கள் மூலம் நேர்முகம் நடத்துவது பொருத்தமானதாக இருக்கும் எனஅவர்களின் இன்னல்களை நேரில் அவதானித்த வயதில்முதிர்ந்த ஒருவர் கருத்து வெளியிட்டார்.

இது இவ்விதமிருக்க இவர்களைப் பதிவதற்கான படிவங்களும் மிகச் சொற்பமான அளவிலேயே இங்கு வந்து சேர்ந்திருப்பதாகவும் தெரிய வருகிறது. (உ-59)

## எரிபொருட்களின் விலைகள் உயரலாம்

(கொழும்பு)

உலகச்சந்தையில் பெற்றோலியப் பொருள்களின் உற்பத்தி விலையின் உயர்வு காரணமாக அடுத்த வாரம் முதல் பெற்றோலியப் பொருள்கள்மற்றும் சமையல் எரிவாயு என்பவற்றின் விலைகள் மேலும் அதிகரிக்கும் என இலங்கை பெற்றோலியக் கூட்டுத் தாபனத்தின் தலைவர் தகம் விமலசேன தெரிவித்துள்ளார்.

உலகச் சந்தையில் பெற்றோலியப் பொருள்களின் உற்பத்தி விலை 30 சதவீதத்தால் உயர்ந்துள்ளது;

உலகச் சந்தையின் விலை மாற்றத்துக்கு ஏற்ப பெற்றோலியப் பொருள்களின் விலைக்கட்டுப்பாட்டில்கடந்த காலங்களில் ஏற்ற இறக்கம் ஏற்படுத்தப்பட்டு வருவது தெரிந்ததே. (உ-8)

# புத்தாயிரமாண்டு புலமைப்பரிசில் பெறும் குடாநாட்டு மாணவர்கள்

### வலய ரீதியாக பெயர் விபரங்கள்

(யாழ்ப்பாணம்)

புத்தாயிரமாம் ஆண்டு புலமைப் பரிசில் வழங்கும் வைபவம் திருகோணமலை கடற் படைத்தளத்தில் எதிர்வரும் 15ஆம் திகதி செவ்வாய் கிழமை நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க கலந்து கொள்ளவுள்ளார்.

யாழ். மாவட்டப் பாடசாலைகளில் இருந்து மேற்படி புலமைப்பரிசில் பெற தெரிவு செய்யப்பட்டவர்களின் பெயர்கள் வலய ரீதியாக வருமாறு:

யாழ்.வலயம்

எஸ். ஜென்சி புனித மரியாள் வித்தி,ஆர். பவிதரன் சென்.றோக்ஸ் றோ.க.வித்தி கே. சுவேதிகா சன்மார்க்க வித்தி,எஸ். கிஸாந்தன் சென் ஜேம்ஸ் ஆண்கள் பாடசாலை கே. கோகுலன் இடைக்காடு மகா வித்தி.ரி. நிலுஜா நல், இ.த.க.பெண்கள் பாடசாலை,எஸ். தர்சிகா கொட்டடி நமசிவாயவித்தி,என். சுமிலா இடைக்காடு மகா வித்தி,என்.செந்தூரன் கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி,ஆர்.சிவாந்தி திருக்குடும்ப கன்னியர் மட மகா வித்தி.

ஆர். ராஜ்காந் கொக்குவில் இந்துக் கல்லூரி, ஏ. ரஜினி சுண்டுக்குளி மகளிர் கல்லூரி, எஸ். சபேசன் யாழ். இந்துக் கல்லூரி, கருணாகரன் யாழ். இந்துக் கல்லூரி;

தீவக வலயம்

எஸ். சுபாஜினி வேலணை துரைசுவாமிமத்தியமகாவித்தியாலயம், பி. ஜெயரூபன் நயினாதீவு மகா வித்தியாலயம், ஜி. சிவாஜினி நயினாதீவு மகா வித்தியாலயம், எ. மதிவதனா கலாநிதி ஆ. தியாகராஜா மகாவித்தியாலயம், ரி. சதீஸ்குமார் யாழ்ற்றன் கல்லூரி, ஜே. நிஷாந்தி சிறிய புஷ்ப மகளிர் கல்லூரி, பி. அருளகுமார் நாகபூசணி மகாவித்தியாலயம், ரி. சர்மிலன் வேலணை துரைசுவாமி மகாவித்தியாலயம், எஸ். பிரசாத் சுந்தரமூர்த்தி மகா வித்தியாலயம், ரி. சென் சலோ புனித மரியாள் வித்தியாலயம், என். கேதீஸ்வரன் நெடுந்தீவு மகா வித்தியாலயம்.

தென்மராட்சி வலயம்

வி.ரவீந்திரன் கைதடி முத்துக்குமாரசாமி மகாவித்தியாலயம், கே.தங்கராஜ் வரணி மகாவித்தியாலயம், கே.ரகுவரன் மிருசுவில் அ.த.க பாடசாலை, எம்.சடகோபன் நுணாவில் அமிர்தாம்பிகை மகாவித்தியாலயம்,எம்.உதயராசா கச்சாய் அ.த.க பாடசாலை, ஆர் தேவிகா விடத்தற்பளை கமலாசினி வித்தியாலயம், கே.தலைஞ்ஜெயன் சாவகச்சேரி இந்துக் கல்லூரி, எஸ்.துளசி சாவகச்சேரி மகளிர் கல்லூரி, ஈ.தர்சிகா பளை மத்திய கல்லூரி, எம்.நடனதவம் சாவகச்சேரி டிறிபேக்கல்லூரி,ஆர்.நீலஜா மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயம், வி.வசந்தகுமாரி உசன் இராமநாதன் மகாவித்தியாலயம்.

**வடமராட்சி வலயம்**

சி. சுபாஜினி வட இந்து மகளிர் கல்லூரி, இ. றெயின் பிருந்தா சென். தோமஸ் றோ.க. பெண்கள் பாடசாலை, த.மயூரன் தொண்டமானாறு வீரகத்திப்பிள்ளை ம. வி, உ. உதயதீபன் இமையாணன் அ. த. க. பா, ஞா. பிருந்தா கரணவாய் ம. வி, த. கஜேந்திரன் புற்றளை ம. வி.

கே.அஜேந்திரன் நெல்லியடி ம.ம.வி,ரி.மதன் சிதம்பராக் கல்லூரி,ரி.துளசிதாசன் உடுப்பிட்டி அ.மெ.க,வி.கோகுலன் ஹாட்லிக் கல்லூரி எம்.மிதுநாளினி வட இந்து மகளிர் கல்லூரி, எஸ். சிம்மகி மெதடிஸ்த பெண்கள் உயர் தரப்பாடசாலை.

வலிகாமம் வலயம்

ரி. தாரிணி சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி, கே. துளசிதாசன் விக்ரோறியாக் கல்லூரி, என். நிரஞ்சினி விக்டோறியாக்கல்லூரி, பி. தனீதா வட்டு. இந்துக் கல்லூரி, ரி. பேபியாழினி யூனியன்கல்லூரி, என். கேசவன் மகாஜனாக்கல்லூரி, என். நிஷா மகாஜனாக் கல்லூரி, எ.மகிழினி உடுவில் முருகமூர்த்தி வித்தியாலயம், ரி. தர்சிகா பொன்னாலை வரதராஜப்பெருமாள் வித்தியாலயம், என். கோபினி சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி, கே.வாசுகி மானிப்பாய் மகளிர் கல்லூரி, எஸ். செல்வரூபன் அராலி சரஸ்வதி மகாவித்தியாலயம், எம்.லோகபரணி மகாஜனாக் கல்லூரி, எஸ். அருள்குமரன் இளவாலை மெய்சண்டான் வித்தியாலயம். (உ- 3)

முறை செய்து காப்பாற்றும்
மன்னவன் மக்கட்கு
இறையென்று வைக்கப்படும்

குறள்

வலம்புரி

## சர்வேசா கருகத் திருவுளமோ

இருபது வருடகால யுத்தம் வாழ்க்கையையே வெறுக்கச் செய்து விட்டது. உயிரழிவு, சொத்தழிவு, அங்கவீனம் எனத் தாங்க முடியாத வேதனையில் மக்கள் அமிழ்ந்து போயுள்ளனர். உறவுகளை இழந்த சோகங்கள் காணாமல் போனவர்களை நினைத்துருகும் உள்ளங்கள் இப்படியே சோகத்தின் பட்டியல் ஈழத் தமிழர் வாழ்வில் நீண்டு செல்கிறது.

கொடிய யுத்தத்திற்கு முடிவேயில்லையா என்ற ஏக்கத்தின் விடியலில நோர்வேயின் அனுசரணையுடன் அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்குமிடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்பட்டது.

ஒரு நாட்டிற்குள் யுத்தம் புரிந்த இருசாரார் தமக்குள் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை ஏற்படுத்திக் கொண்டு, யுத்தத்திற்கு முடிவுகட்டுவதாக முடிவு செய்தனர். சமாதான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டது தாய்லாந்தில் அரசும் விடுதலைப் புலிகளும் சந்தித்து சமாதானத்தின் முதற்கட்டப் பேச்சுக்களை நடத்தினர். பிரதமர் ரணிலை புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கமும், தலைவர் பிரபாகரனை, அமைச்சர் ஜீ.எல். பீரிஸூம் பாராட்டினர். போர்க்களத்தில் சந்தித்த இருதரப்பினரும் சமாதான மேசையில் சந்தித்தமை மக்களுக்கு ஆறுதலைத் தந்தது. இருபது வருடகால யுத்தத்திற்கு முற்றுப்புள்ளி வைக்கப்படுமென்ற நம்பிக்கையை கொடுத்தது. ஆனால் அம்பாறையில் அதிரடிப்படையினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூடும், திருமலையில் பொலிஸார் மேற்கொண்ட கிரனெட் வீச்சும் பத்து அப்பாவிப் பொது மக்களைப் பலியெடுத்துள்ளது. ஐம்பதுக்கும் மேற்பட்டவாகளைக் காயப்படுத்தியுள்ளது. சமாதான சூழ்நிலையில் இடம்பெற்ற இத்தகைய கொடூர சம்பவம சமாதானத்தின் பால் கொண்டிருந்த நம்பிக்கையை கேள்விகுறியாக்கியுள்ளது.

எத்தனையோ முயற்சிகளின் மத்தியில் உருவாக்கப்பட்ட சமாதான சூழ்நிலையைக் குழப்புவதுல எவர் ஈடுபட்டாலும் அது மக்களால் மன்னிககப்பட மாட்டாது. கண்ணீர் விட்டு வளர்த்த சமாதானத்தை சர்வேசா கருகத் திருவுளமோ.

# கண்களின் காந்தசக்தி கற்பனைக்கெட்டாத

# அற்புதங்களைச் செய்யும் வல்லமை வாய்ந்தது

மக்களின் அறிவும் திறமும் வளர்வதற்குக் கண்களே முக்கிய தொண்டு செய்கின்றன. நமுடையஎண்ணங்கள் கண்களின் வழியே மூளைக்குச் சென்று- கைகளையும்உடலையும் காரியமாற்றச் செய்கின்றன. நம்முடைய கண்களை மாதிரியாக வைத்தே படம் பிடிக்கும் 'கமரா' பெட்டியைத் தயாரித்திருக்கிறார்கள் என்றால், கண்ணின்அமைப்பு முறையைப் பற்றியும் சக்தியைப் பற்றியும் நாம் பெருமைப் படத்தான் வேண்டும்.

'கமராப்' பெட்டியில் தெரிகின்ற 'தலை கீழ்' உருவம் படத்தில் சரியாகப் பதிவது போல- நம் கண்களும்முதலில் பொருட்களைத்தலை கீழாகத் தான் பார்க்கின்றன. பின்னரே, வெண்திரையிலிருந்து இருள் திரைக்குப் போய் உருவத்தைச் சரியாகக் காட்டுகிறது. கருமணியின் ஒட்டை வழியே உருவ ஒளி செல்வதும் மூளையை அடைந்து- அவை கண்ணின் மற்றத் திரைகளை அணுகி நமக்குச் சரியானபார்வையைக் கொடுப்பதும் நாம் சொல்லும் போது விந்தையாகத் தோன்றினாலும்- விஞ்ஞானம் காட்டும் உண்மையாகும்.

### கண்களின் காந்த சக்தி

நம்முடைய எண்ணங்களுக்கும்- அறிவின் வளர்ச்சிக்கும்- வாழ்வுக்கும் கண்களே பெரிதுமஉதவுகின்றன. கண்களின் கவர்ச்சியில் மயக்கமடையாத மக்களே இருக்க முடியாது. கண்களுக்கு இருக்கக் கூடிய காந்த சக்தியைநாம்உணர்ந்து அதனைச் செயல்படுத்தினால் மன்னாதி மன்னனையும் மண்டியிடச் செய்யலாம். வீராதி வீரனையும்விரட்டியடிக்கமுடியும். கண்களே நமக்கு வழி காட்டி கண்களுக்கு இருக்கும் ஆற்றலையும் (சக்தியையும்) உலக மக்கள் அனைவரும் நன்றாகப் புரிந்தே வைத்திருக்கிறார்கள். கண்களின் மதிப்பைக் குறைத்துக் கூற யாரும் முன்வர மாட்டார்கள் என்பதை நீங்கள்உணர்ந்திருந்தாலும்- அதனுடைய சக்தியை சோதித்துப் பார்க்க முயற்சி செய்யாமலே இருந்திருக்கக் கூடும்.

கண்களின் காந்தசக்தியால் பிறரைக் கவர்ச்சி செய்து மன எண்ணத்தால் உறுதிப்படுத்தி கைவிரல்களின் மூலம் வசியப் படுத்தும்'மெஸ்மெரிசக்' கலையைப் பழகுவதன் மூலமே மனித சக்தியை மனிதனால் புரிந்துகொள்ள முடியும். நல்ல செல்வாக்குடன் ஒருவர் வாழும் போதும் ஆரோக்கியமாக இருக்கும் போதும்-நல்ல முறையில் வியாபாரஞ் செய்யும் போதும் பிறர்'திருஷ்டி' பட்டுவிடக் கூடாது. கண் வைத்துவிடக் கூடாது. அதனால் நமக்கு அழிவு நேர்ந்தாலும் நேரும் என்பதற்காக தடுப்புமுறையாகப் படிகாரம் கட்டித் தொங்க விடுவதும், பூசணிக்காயைத் தொங்க விடுவதும் அன்றாடம் நாம் காண்கின்ற ஒரு நிகழ்ச்சியாகும். இப்படிப்பட்டவர்களின் செய்கைகளை நாம்'கேலி' செய்வது தவறுஅப்படிப்பட்டவர்களின் அனுபவ மொழிகளை நாம் கேட்டுத் தெரிந்து கொள்வதே நல்லது.

### முன்னெச்சரிக்கை நல்லது

ஒரு கிராமத்தில் ஒரு நண்பர் வந்து, தோட்டங்களையோ-வயல்களின்செழிப்பையோ பார்வையிடுவதாக சொன்னாலே கிராம வாசிகள் மிகவும் பயப்படுவார்களாம். அந்த நண்பர் வந்து பார்த்து ஆஹா பிரமாதம் நன்றாக விளைந்திருக்கிறதே! என்று சொல்லிப் போன மறுதினமே, எல்லாம் தீய்ந்து காய்ந்து போகுமாம். ஒரு சமயம் கண்களின் சக்தியைப் பற்றிய பேச்செழுந்த போது, பிரபல இலக்கிய நூல்களின் ஆசிரியர், புலியூர்கேசிகன் அவர்கள் மேற்கூறிய உண்மை நிகழ்ச்சியை, எமக்கு எடுத்துக் காட்டி கண்ணின் சக்தியை உறுதிப்படுத்தினார். இன்னும் பலசம்பவங்களை அனுபவரீதியாக அறிந்தவர்களைக் கேட்டுப்புரிந்து-தெரிந்து கொண்டால் நீங்களும் எச்சரிக்கையோடுவாழலாம். நீர் ஊற்றுக்களையும்: தங்கச்சுரங்கங்களையும் கண்களின் மூலமே ஊடுருவி அறியக் கூடிய ஆற்றல் படைத்தவர்கள் பலர் நம்மிடையே இன்றும் உயிரோடு இருக்கத்தான் செய்கிறார்கள்.

### சூரியகாந்

### வசியப்படுத்தல்

ஆண்களும் பெண்களும் 'காதல்' வசமாகத் துணைபுரிவதும் கண்களே! கண்களின் காந்த சக்தியால் கவர்ச்சிக்கப் பெற்று, மயங்கி ஒருவரையொருவர் வசியப்படுத்திக் கொளகிறார்கள். உப்பரிகையில் நின்றுகொண்டு, வீதியை நோக்கி நின்ற சீதையின் கண்களும் வீதியிலே துணையோடு நடந்து வந்த இராமனின் கண்களும் ஒரு 'விநாடி' தான் சந்தித்தன என்றாலும் அவைகளின் வேக சக்தியால் உடனடியாக மோதப்பட்டு வசியமாகி 'காதல்' வசமானார்கள்! எனக் கம்பராமாயணம் கூறுவதை நாம் பொய்யென்று கூறமுடியுமா? நாட்டிலே இன்றும் இதைப் போன்ற கண்டதும் காதல் நடைபெற்றுக் கொண்டு தானே வருகிறது.

கன்னியரின் கடைக்கண் பார்வை மட்டும் கிட்டிவிட்டால்- மாமலையும்ஓர் கடுகாகும்! என்று எக்காளமிடும் கவிஞர்களின் கூற்றையும் நாம் ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும். மயக்கு மொழிகளோடு மயக்கு விழிகளையும் ஒரு பெண் பெற்றிருந்தால், இந்த வையத்தில் அவள் நினைத்தால் 'ராணி' போல் வாழ்ந்து காட்ட முடியும்!

'தேவர்' களைப் பற்றியும் புராணங்கள் வர்ணிக்கின்ற பொழுது அவர்களின் கால்கள் தரையில் படாமல் அந்தரத்தில் நிற்பார்கள்- கண்களின் இமைகளை அசைக்க மாட்டார்கள்!'' என்று கூறுகின்றன: இவற்றிலிருந்து நாம் தெரிந்து கொள்வது என்ன? கண்களின் இமைகளை மனிதர்களாகிய நாமும் அசைக்காமல் பழகிக் கொண்டால் மனிதர்களில் தேவர்களாக வாழமுடியும் என்பதை அது அறிவிக்கிறது அல்லவா? கண்ணுக்கு உள்ள காந்தசக்தியைப் பயன்படுத்தி எதனையும் சாதிக்க முடியும்- எவரையும் வசியப்படுத்த முடியும்: என்பதையும் நீங்கள் திடமாக நம்ப வேண்டும்.

### மந்திர தந்திரமல்ல

ரேடியோவைத் திருப்பினால் பாடல் கணீரென்று கேட்கிறது! எங்கோ பாடுகிறவரின் குரலை நாமிருக்கும் இடத்திலேயே கேட்க முடிகிறது. அலைகளின் மூலமும்- ரேடியோவின் அமைப்பின் மூலமும் இவை நடைபெறுகிறதென்றாலும், நாம் இப்போதுஆச்சரியப்படுவதுகிடையாது. கம்பியில்லாமலேயே- தூரத்துச் செய்திகளை நம் இன்று அறியமுடிகிறதென்றாலும் அதிசயப் படுவது கிடையாது. டெலிவிஷன் பெட்டியிலே ஆடிப்பாடும் நபரையே நேரில் இன்று காணும் வாய்ப்புக் கிடைத்திருக்கிறது! இருந்தும் இவை மந்திரம் என்றோ! தந்திரம் என்றோ ஒதுக்குவது கிடையாது.

மன எண்ண அளவிலும்- எழுத்தளவிலும் சில அதிசய சகதிகளைப் பற்றிய செய்திகள் இருக்கும் வரையில் அவைகளைப் பற்றிப் புரிந்து கொள்ள முடியாவிட்டாலும் -செயல் படுத்தப்படும் போது நாம் அதன் பலனை அனுபவிக்கிறோம், செம்பும், துத்தநாகமும், ஈயமும், காந்தக் கல்லும் தனித்தனியே இருக்கும்போது அதன் சக்தி வெளிப்படுவது கிடையாது. ஒன்றிற்கொன்று உள்ள குண ஒற்றுமைகள் பொருந்தப்படும் போதுதான் அவற்றின் சக்தி வெளிப்படுகின்றது. காற்றில் உள்ள அலைகளைப் பயன்படுத்த மனிதன் கற்றுக் கொண்டிருக்கிறான்.

### மனித உடலில் எல்லா சக்திகளும் உண்டு

தண்ணீரின் வேகசக்தியைப் பயன் படுத்தி மின்சாரத்தை உற்பத்தி செய்யவும் முடிகிறது. பூமியிலிருந்து கிடைக்கக் கூடிய உலோகங்களையும் இரசாயனப் பொருட்களையும் பயன்படுத்தி சில அரிய காரியங்களைச் செய்யவும் தெரிந்து வைத்திருக்கிறான. இவற்றைப் பற்றி இன்று அசட்டையாகப் பேசமுடியாது. மனித உடல்லேயே எல்லாவகையான உலோகப் பொருட்களும்- ரசாயனமருந்துகளும் இருந்து- காந்த சக்தியை உண்டாக்கி- மின்சார மயமாக்கப் பெற்றிருக்கிறான். ஆகவே, மனிதனிடமுள்ள- மின்சார காந்தசக்தியைக் கொண்டு- அதிசயிக்கத் தக்க காரியங்களைச் சாதிக்க முடியும் என்று நீங்கள் நம்ப வேண்டும், 'ஆஸிட்' என்ற அமிலச்சத்து நம் வயிற்றிலே இருக்கிறது. அவற்றைத் தண்ணீரைக் கொண்டு தணிக்கிறோம், இரும்பு, சுண்ணாம்பு சர்க்கரை போன்ற சத்துக்களும் நம் உடலில் இருந்து கொண்டே இருக்கின்றன. நம் உடலிலேயே, பூமியில் இருக்கும் அபூர்வ பொருட்கள அனைத்தும இருப்பதால் அவற்றைக கொண்டு நம் சக்தியை மிகைப் படுத்திக் கொள்ள நம்மால் முடியும்.

## தினசரி தியானம்

## யோக சக்தி

எல்லா வகையான நோய்கள் துன்பங்கள் மற்றும் நெருக்கடிகளையும் யோகசக்திஅழிக்கக்கூடியது, பிறப்பு மற்றும் இறப்புகளைக் கொண்ட சம்சாரச் சக்கரத்தில் உழல்வதிலிருந்து உங்களை விடுவிக்கிறது ஞானத்தின் வழியாகப் பல்வேறு சித்திகளையும், முத்திகளையும் தருகிறது, ஆகவே, அழியாமையாகிய அமிர்தத்தை அருந்தி யோகியாகுங்கள். இறைவனோடு ஐக்கியமாவது தான் வாழ்க்கையின் ஆரம்பமும் முடிவும ஆகும். அதுதான் மிகச் சிறந்த நனமையாகும்.

சுவாமி சிவானந்தர்

# அம்பாறைச் சம்பவத்தினால் சமாதான முயற்சிகள் இடை நிறுத்தப்படாது

## கௌசல்யன் உறுதிப்படுத்துகிறாா

(கொழும்பு)

காஞ்சிரங்குடாவில் இடம் பெற்ற சம்பவத்தினால், தற்போது முன்னெடுத்துச் செல்லப்படும் சமாதான முயற்சிகள் எந்த வகையிலும் இடை நிறுத்தப்படமாட்டாது என தமிழீழ விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் தெரிவித்துள்ளார்.

2ஆம்லெப்டினன் மாலதியின் 15ஆவதுஆண்டுநினைவு தின நிகழ்வுநேற்றுமுன் தினம் கல்லடிசிவானந்தவித்தியாலய மைதானதில் இடம்பெற்றது. அதில்கலந்து கொண்டு உரையாற்றிய சமயம் கௌசல்யன் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில், இச்சம்பவம் வேதனைக்குரியது எனவும் அதனை வன்மையாக கண்டிப்பதாகவும் குறிப்பிட்டார். (உ-8)

## பிரதான வீதி பாவனைக்கு


(கொழும்பு)

பலாங்கொடைப் பகுதியில் அண்மையில் ஏற்பட்ட மண் சரிவு காரணமாக மூடப்பட்டிருந்த பிரதான வீதி மீண்டும் பாவனைக்காக திறந்துவிடப் பட்டுள்ளது.

கொழும்பு-பதுளைபிரதான வீதியேஇவ்வாறுதிறந்துவிடப் பட்டுள்ளது.

எனினும், இப்பாதையூடாக சிறிய ரக வாகனங்களேசெல்ல முடியும் என அங்கிருந்துவரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இப்பகுதியில் ஏற்பட்டமண் சரிவினால் 6 பேர் பலியானதுடன், இரு வீடுகள் முற்றாக மூடப்பட்டதுவும்தெரிந்ததே. (உ-8)



திருமலையில் பொலிஸார் மேற்கொண்ட துப்பாக்கி சூடு - கிரனைட் வீச்சில் காயமடைந்த அப்பாவிப் பொதுமக்களை படங்களில் காணலாம்.

## யாழ். குடாநாடு...

புரிந்துணர்வு ஒப்பந்தம் நிம்மதியையும், நீதியையும் வழங்குமென்று எதிர்பார்த்த எம் மத்தியில் அரசபடைகள் குறிப்பாகச் சிறிலங்கா அதிரடிப்படைகள் இழைத்து வரும் மனிதாபிமானமற்ற கொலைகளையும், கொடுமைகளையும் மனித உரிமை மீறல்களையும் சர்வதேச சமூகத்தின் கவனத்திற்கு கொண்டுவர விரும்புகின்றோம்.

தமிழர் தாயகத்தில் இயல்பு நிலையை உருவாக்கும் நோக்குடன் செய்து கொள்ளப்பட்ட சில ஒப்பந்த வசதிகளும் நல்லெண்ண நடவடிக்கைகளும் முழுமையாக நிறைவேற்றப்படாமல் போர் நிறுத்த ஒப்பந்த விதிகளுக்கு முரணான வகையில் சனநெருக்கடி நிறைந்த தமிழரின் நகரங்கள், பட்டினங்களில் உள்ள சோதனைச் சாவடிகளையும், தடைகளையும் அகற்றுவதற்கு சிங்கள ஆயுதப் படையினர் மறுத்து வருவதுடன் பொது மக்களை மிரட்டியும் இறுதியில் கொலை செய்யும் அளவிற்கு நிலைமை மோசமாகிவிட்டது. இதனால் சமாதானத்தின் பால் எமது மக்கள் கொண்டிருந்த நம்பிக்கையும் நிம்மதியும் இடிந்த வருகின்றது.

மக்கள் தமது சனநாயக உரிமைக்காக, வாழும் உரிமைக்காக அகிம்சை வழியில் போராட முற்பட்ட போது சிங்கள தேசம் தனது ஆயுத பலத்தினாலும், படை பலத்தினாலும் அடக்க முற்படுவதும் அழிக்க முற்படு[illegible]ம், அழிக்புறப்படுவதும் எம்மால் ஏற்றுக் கொள்ள முடி[illegible] ஜீரணிக்க முடியாது என்பதை சிங்கள தேசத்திற்கும் அதன் ஆயுத படைகளுக்கும் ஏன் சர்வதேச சமூகத்திற்கும் எ[illegible]க் காட்டும் வகையில் இன்று 12ந் திகதி துக்கதினம், ஹர்த்தால், கதவடைப்புப் போராட்டம் எம்மக்கள் சார்பில் நடத்தப்படவிருக்கின்றது. இப்போராட்ட முஸ்தீபுக்கு அனைத்து மக்களும் அரச சார்பற்ற கூட்டுறவு, க[illegible]வி, வர்த்தக, போக்குவரத்து, பொது நிறுவனங்களும் தமது பூரண ஒத்துழைப்பை வழங்கி எமது உணர்வை சிங்கள தேசத்திற்கும், சர்வதேசத்திற்கும் எடுத்துக் காட்டுவோம் என்றும் அவ்வறிக்கையில் கேட்கப்பட்டுள்ளது.

## ஏழு பேரின் உடல்களும் நேற்றுத் தகனம்

(அம்பாறை)

திருக்கோவில் காஞ்சிரம் குடாவில் கடந்த புதன்கிழமை விசேட அதிரடிப்படையினரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகிப் பலியான ஏழு பொதுமக்களினதும் பூதவுடல்கள் திருக்கோவில் மாணிக்கப் பிள்ளையார் பொது மயானத்தில் நேற்றுப்பிற்பகல் தகனம் செய்யப்பட்டது.

இவர்களின் உடல்கள் பேழைகளில் வைக்கப்பட்டு ஊர்திகள் மூலம் திருக்கோவில் பிரதேசத்தில் உள்ள சகல கிராமங்களினூடாகவும் மக்கள் அஞ்சலிக்காகக் கொண்டு செல்லப்பட்டன.

இவ் இறுதி நிகழ்வில் அமைச்சர் தி.மகேஸ்வரன், தமிழ் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள், தமிழீழ விடுதலைப்புலிகளின் உள்ளூர் பிரதிநிதிகள் மற்றும் பாடசாலை மாணவர்கள் உட்பட ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டனர். (ந-5)

## அம்பாறைச்...

கொண்ட இவ்விசேட விசாரணைக் குழுவில் தமிழீழ விடுதலைப்புலிகளின் பிரதிநிதியொருவரும் நியமிக்கப்படவுள்ளார் என்று உள்துறை அமைச்சின் செயலாளர் எம்.என். யுனைட் தெரிவித்துள்ளார். (ம)

## திருகோணமலை...

எடுத்துச் செல்ல முற்பட்ட போதும கடற்படையினரின் கெடுபிடிகளைச் சமாளிக்க வேண்டியிருந்ததால் பின்னர் அவர்கள் முச்சக்கரவண்டிகள் மூலம் திருகோணமலை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர்.

இச்சம்பவம் பற்றி மேலும் தெரிய வருவதாவது:-

அம்பாறைச் சம்பவத்திற்கு கண்டனம் தெரிவித்து நேற்றுக் காலை 8.15மணியளவில் திருகோணமலை யில் இருந்து வடக்கு நோக்கி 4கிலோ மீற்றர் தொலைவில் திருக்கடலூர் பிறிமாபுரம் பகுதிகளில் வீதிமறிப்புப் போராட்டத்தில் ஈடுபட்ட இளைஞர்கள் மீது மலைப்பிரதேசங்களில் இருந்து காடையர்கள் சரமாரியாகக் கற்களை எறிந்தும் துப்பாக்கியால் சுட்டும் கிரனைட் வீசியும் தாக்குதல்களை ,மேற்கொண்டனர். இதன்போது துப்பாக்கிச் சூட்டுக்கு ஒருவரும் கைக்குண்டுத் தாக்கதலுக்கு இருவரும் காயமடைந்தனர்.

இதனைத் தொடர்ந்து காலை 9மணியளவில் திருகோணமலை கண்டி வீதிகளில் இருந்து 5கிலோ மீற்றர் தொலைவில் அபயபுரம், காந்திநகர் ஆகிய இடங்களிலும் மக்கள் மறியற் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். அபயபுரத்தில் ஆர்ப்பாட்டம் செய்த தமிழ் மக்கள் மீது அப் பகுதி சிங்கள மக்கள் கல் வீச்சில் ஈடுபட்ட போது பொலிஸ் அதிகாரி ஒருவரும், ஒரு பொலிஸாரும் காயமடைந்தனர். இதன் போது பொலிஸாரும் அதிரடிப்படையினரும் துப்பாக்கிப் பிரயோகத்தில் ஈடுபட்டனர். இத்துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தின் போது அப்பாவிப் பொதுமக்கள் மூவர் பலியாகினர்.

இதனை அடுத்து சம்பவம் நடைபெற்ற இடங்களைப் பார்ப்பதற்கு தமிழீழ விடுதலைப் புலிகள் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழுத் தலைவரிடம் அனுமதி கோரியுள்ள போதும் நேற்றுவரை அனுமதி வழங்கவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

இச் சம்பவங்களை அடுத்து இப பகுதிகளில் இராணுவமும் பொலிஸாரும் இணைந்து தீவிர ரோந்துப் பணியில் ஈடுபட்டுள்ளனர். (ம)

## காயமடைந்த...

அரசினர் பொது வைத்தியசாலையில் சிசிக்சை பெற்று வருகின்றனர்.

காயமடைந்தோர் விபரம் வருமாறு:-

ராஜ்குமார் (வயது 28), ரமேஷ் கண்ணா (வயது 24), பிரசாத (வயது 16), தனேஷ்குமார் (வயது 27), மதிவேந்தன் (வயது 34), பிரபாகரன் (வயது18), ஆனந்தன (வயது16), தகூர் (வயது 32), வசந்தகுமார் (வயது 26), பிரபாகரன் (வயது25), டிங்கி ராஜா (வயது 25), நாதன் (வயது 24), சுரேஷ்குமார் (வயது 24) கௌரிராஜ்(வயது19), கந்தன் (வயது 20), தினேஷ்ராஜ் (வயது 25), தம்பையா (வயது 59), விஜயன் (வயது 18), பாலகுமார் (வயது 21), ஜோன்சன் (வயது 25), சதீஸ் (வயது 26), வேலு ஜெயசிங்கம்(வயது 25), அன்ரனிதாஸ் (வயது 20), சுப்பிரமணியம் (வயது 48), பிரதீப்(வயது 19) ஜோண்சன் (வயது 38) நாகேந்திரா (வயது 18) வித்தியானந்தன், இராசேந்திரா பிரசாத், உதயராசா. இதேவேளை காயமடைந்தவர்களில் மூவர் சிகிச்சை பெற்று வீடு திரும்பியுள்ளனர். (ம)

### கிழக்கு மாகாணச் சம்பவம்

## கண்காணிப்பு குழுத் தலைவருக்கு தமிழ்ச்செல்வன் கடிதம்

(வவுனியா)

அம்பாறை மாவட்டத்தில் காஞ்சிரம்குடா மற்றும் திருகோணமலை ஆகிய இடங்களில் மேற் கொள்ளப்பட்ட கண் மூடித்தனமான தாக்குதல்களில் பொது மக்கள் கொல்லப்பட்டமை குறித்து தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப தமிழ்செல்வன் போர் நிறுத்த சர்வதேச கண்காணிப்புக் குவினரிடம் தனது கடுமையான கண்டனத்தை தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக கிளிநொச்சியிலுள்ள போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுப் பிரதிநிதிகள் ஊடாக போநிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவருக்கு தமிழ்ச்செல்வன் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.அக் கடிததத்தில்,

காஞ்சிரம் குடா மற்றும் திருகோணமலை ஆகிய இடங்களில் பொதுமக்கள் மீது மேற் கொள்ளப்பட்ட தாக்குதல்களில் பலர் உயிரிழந்தும், காயமடைந்தும் உள்ளனர் இந்த நடவடிக்கை புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மீறுமசெயலாகும்.

இவ்வாறான சம்பவங்கள் இனியும் இடம் பெறாமல் இருப்பதற்கு உறுதியான நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட வேண்டும்.

மேற்படித் தாக்குதல் சம்பவம தொடர்பாக தமது கடுமையான கண்டனத்தைத் தெரிவித்துக் கொள்வதாகவும் அக்கடிதத்தில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.(த-5)

## புகையிரதப்...

தீயிட்டுக் கொளுத்தியுள்ளனர்.

சிலிப்பர் கட்டைகள் எரிந்து சாம்பரானதால் மாத்தறைக்கான புகையிரத சேவை உடனடியாக நிறுத்தப்பட்டது. (ம)

## திருமலையில்...

6மணிவரை ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

திருகோணமலை பட்டணமும் சூழலும் பிரதேச செயலாளர் பிரிவிலேயே ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டதை அடுத்து அங்கு நிலைமைகள் கட்டுப்பாட்டுக்கு கொண்டுவரப்பட்டபோதும் மக்கள் மத்தியில் பதற்றம் நிலவுவதாகவும் திருகோணமலை வெறிச்சோடிக் காணப்படுவதாகவும் எமது செய்தியாளர்கள் அறிவித்துள்ளனர். (ம)

## யாழ். பல்கலை...

காரணங்களால் நாளை ஞாயிற்றுக்கிழமைக்கு பிற்போடப்பட்டுள்ளது.

நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ள பட்டமளிப்பு விழா முன்னர் திட்டமிட்டவாறு நடைபெறுமெனவும் துணைவேந்தர் தெரிவித்துள்ளார். (ம)

## நிலக்கண்ணி...

ஒருவர் உடல் சிதறிப் பலியானார்.

நேற்று மாலை 4.15மணியளவில் மட்டுவிலில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் கோவிலடியைச்சேர்ந்த விசுவலிங்கம் சிவபாதம் (வயது48) என்பவரே உடல் சிதறிப் பலியானவராவார். இவரது சடலம் யாழ்.போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. (த)


**யாழ்ப்பாண பல்கலைக்கழக 22வது பொதுப்பட்டமளிப்பு விழா -2002**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக 22வது பொதுப்பட்டமளிப்பு விழா தவிர்க்கமுடியாத சூழ்நிலையால் ஏற்கனவே அறிவித்தபடி இன்று (12.10.2002) சனிக்கிழமை நடைபெறுவதற்குப் பதிலாக மறுநாள் 13.10.2002 ஞாயிற்றுக்கிழமை 12ம் திகதிய ஒழுங்கின் பிரகாரம் நடைபெறுமென அறியத்தருகின்றேன்.

பதிவாளர்
யாழ். பல்கலைக்கழகம் [C/5128]

**பதவி வெற்றிடம்**

யாழ்ப்பாணத்திலும் கொழும்பிலும் இயங்கும் வர்த்தக நிறுவனத்திற்கு நல்ல அனுபவமும் திறமையும் மூன்று மொழிகளும் தெரிந்த வேலையாட்கள் தேவை

1, கணக்காளர்
2, களஞ்சியப் பொறுப்பாளர்
3, சிட்டை லிகிதர்

14.10.2002 திங்கள் பிற்பகல் 3மணிக்கு நேரில் வரவும்

**ஸ்ரீமுத்துமாரி அம்மன் றேடர்ஸ்,**
**171 கே.கே.எஸ் வீதி,**
**யாழ்ப்பாணம்.**
T.P.NO. 021-2223328

(குறிப்பு) கொழும்பில் உள்ள ஸ்தாபனத்தில் வேலை செய்பவர்களுக்கு உணவு தங்குமிடவசதி செய்து கொடுக்கப்படும். [6110]

**2 ஆம் ஆண்டு நினைவலைகள்**

அன்னையின் மடியில் 28 04 1944



ஆண்டவன் பிடியில் 12 10 2000

அமரர் கந்தர் சின்னத்தம்பி
(புலோலி ப.நோ.கூ.சங்க ஊழியர்)
திதி:12.10.2002
"ஈண்டும் இரண்டாண்டு சென்றாலும் இறக்காது இதயத்தில் உம் நினைவலைகள்"
-குடும்பத்தினர். [C/5127]

சுகாதார முறைப்படி தயாரிக்கப்பட்ட சுத்தமான நல்லெண்ணெய்
**V.S.P லஞ் ஒயில்**
தயாரிப்பாளர்
**பரிமளா ஸ்ரோர்ஸ்**
26A, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். [C/4839]


**செய்தியாளர்களுக்கான கூட்டம் ஒத்திவைப்பு**

இன்று நடைபெறவிருந்த வலம்புரி செய்தியாளர்களுக்கான கூட்டம் தவிர்க்க முடியாத காரணத்தினால் ஒத்திவைக்கப்பட்டுள்ளது. கூட்டம் நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

-நிர்வாக உத்தியோகத்தர்-

பாட்டன் நட்ட பனையால் பயன் பெறு-இன்று நீ நாட்டும் பனையால் நாளைய சந்ததி பயன்பெறும்

இப் பத்திரிகை வலம்[illegible] அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 12.10.2002 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.